## ஏழாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 1

**1] பண்ணினை இயற்கை வைத்த; பண்பனே போற்றி போற்றி - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் யார்?**

**1] பொதுமை வேட்டல், திரு.வி.க**

2] தமிழ்ப்பசி, க. சச்சிதானந்தன்

3] எழிலோவியம், வாணிதாசன்

4] ஆனந்த களிப்பு, தாயுமானவர்

**2] பெண்மையில் தாய்மை வைத்த; பெரியனே போற்றி போற்றி - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் யார்?**

**1] பொதுமை வேட்டல், திரு.வி.க**

2] தமிழ்ப்பசி, க. சச்சிதானந்தன்

3] எழிலோவியம், வாணிதாசன்

4] ஆனந்த களிப்பு, தாயுமானவர்

**3] வண்மையை உயிரில் வைத்த; வள்ளலே போற்றி போற்றி - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் யார்?**

**1] பொதுமை வேட்டல், திரு.வி.க**

2] தமிழ்ப்பசி, க. சச்சிதானந்தன்

3] எழிலோவியம், வாணிதாசன்

4] ஆனந்த களிப்பு, தாயுமானவர்

**4] உண்மையில் இருக்கை வைத்த; உறவனே போற்றி போற்றி - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் யார்?**

**1] பொதுமை வேட்டல், திரு.வி.க**

2] தமிழ்ப்பசி, க. சச்சிதானந்தன்

3] எழிலோவியம், வாணிதாசன்

4] ஆனந்த களிப்பு, தாயுமானவர்

**5] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] பண் – இசை

2] வண்மை – கொடைத்தன்மை.

3] போற்றி – வாழ்த்துகிறேன்

**4] நவ்வி - கரடி**

**குறிப்பு :- நவ்வி - மான்**

**6] திரு.வி.க என்பதன் சுருக்கம் என்ன?**

1] திருபெரும்புதூர் விருத்தாசலனார் மகனார் கலியாணசுந்தரனார்

2] திருவாடானை விருத்தாசலனார் மகனார் கலியாணசுந்தரனார்

3] திருச்செந்தூர் விருத்தாசலனார் மகனார் கலியாணசுந்தரனார்

**4] திருவாரூர் விருத்தாசலனார் மகனார் கலியாணசுந்தரனார்**

**7] திரு.வி.கலியாணசுந்தரனார் அவர்களின் பெற்றோர் பெயர்?**

1] சாத்தப்பன் - விசாலாட்சி

2] சோமசுந்தரம் - மணியம்மை

**3] விருத்தாசலனார் – சின்னம்மையார்**

4] வெங்கட்ராமன் - அம்மணி அம்மாள்

**8] திரு.வி.கலியாணசுந்தரனார் அவர்கள் பிறந்த ஊர்?**

1] திருவாரூர் மாவடத்திலுள்ள மன்னார்குடி

**2] காஞ்சிபுரம் மாவடத்திலுள்ள துள்ளம்**

3] விருதுநகர் மாவடத்திலுள்ள சாத்தூர்

4] தூத்துக்குடி மாவடத்திலுள்ள திருச்செந்தூர்

**9] திரு.வி.கலியாணசுந்தரனார் அவர்கள் பிறந்த ஊர் தற்பொழுது --------------------- என அழைக்கப்படுகிறது?**

1] அய்யம்பாளையம்

2] நீடாமங்கலம்

3] ஜோலார்பேட்டை

**4] தண்டலம்**

**குறிப்பு :- திரு.வி.கலியாணசுந்தரனார் அவர்கள் பிறந்த ஊர் காஞ்சிபுரம் மாவடத்திலுள்ள துள்ளம். இவ்வூர், தற்பொழுது தண்டலம் என அழைக்கப்படுகிறது. இவ்வூர், சென்னையை அடுத்துள்ள போரூருக்கு மேற்கே உள்ளது.**

**10] கீழ்க்கண்ட கூற்று யாருடன் தொடர்புடையது?**

**இவர் தொழிலாளர் நலனுக்கும், பெண்கள் முன்னேற்றத்துக்கும் அயராது பாடுபட்டார். மேடைத்தமிழுக்கு இலக்கணம் வகுத்தார். இவரின் தமிழ்நடையைப் போற்றித் "தமிழ்த்தென்றல்" எனச் சிறப்பிக்கப்படுகிறார்.**

1] உ.வே.சா

2] தாயுமானவர்

**3] திரு.வி.க**

4] மறைமலையடிகள்

**11] கீழ்க்கண்ட கூற்று யாருடன் தொடர்புடையது?**

**சென்னை இராயப்பேட்டை வெஸ்லி பள்ளியில் தமிழாசிரியராகவும், நவசக்தி முதலான இதழ்களில் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.**

1] உ.வே.சா

2] தாயுமானவர்

**3] திரு.வி.க**

4] மறைமலையடிகள்

**12] மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை, தமிழ்த்தென்றல், உரிமை வேட்கை, முருகன் அல்லது அழகு ஆகிய நூல்களின் ஆசிரியர் யார்?**

1] உ.வே.சா

2] தாயுமானவர்

**3] திரு.வி.க**

4] மறைமலையடிகள்

**13] திரு.வி.கலியாணசுந்தரனார் அவர்களின் காலம்?**

1] 26.08.1863 முதல் 17.09.1933 வரை

2] 26.08.1873 முதல் 17.09.1943 வரை

**3] 26.08.1883 முதல் 17.09.1953 வரை**

4] 26.08.1893 முதல் 17.09.1963 வரை

**14] வாழ்த்துப் பகுதியில் இடம்பெற்றுள்ள பாடல், திரு.வி.க. இயற்றிய பொதுமை வேட்டல் என்னும் நூலில் போற்றி என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது. நாடு, மதம், இனம், மொழி, நிறம் அனைத்தையும் கடந்து உலகத்தை ஒரு குடும்பமாகக் கருதுவதே பொதுமைவேட்டல். தெய்வநிச்சயம் முதலாகப் போற்றி ஈறாக உள்ள ---------------- தலைப்புகளில், ------------------ பாக்களால் ஆனது இந்நூல்.**

1] 13, 330

2] 23, 240

3] 34, 340

**4] 44, 430**

**15] விடுபட்டதை நிரப்புக.....**

**வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**

**---------------- ----------------- -----------------**

**1] தீமை இலாத சொலல்**

2] நன்மை பயக்கு மெனின்

3] தன்நெஞ்சே தன்னைச் சுடும்

4] உள்ளத்துள் எல்லாம் உளன்

**16] விடுபட்டதை நிரப்புக.....**

**பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்த்த**

**---------------- ----------------- -----------------**

1] தீமை இலாத சொலல்

**2] நன்மை பயக்கு மெனின்**

3] தன்நெஞ்சே தன்னைச் சுடும்

4] உள்ளத்துள் எல்லாம் உளன்

**17] விடுபட்டதை நிரப்புக.....**

**தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்**

---------------- ----------------- -----------------

1] தீமை இலாத சொலல்

2] நன்மை பயக்கு மெனின்

**3] தன்நெஞ்சே தன்னைச் சுடும்**

4] உள்ளத்துள் எல்லாம் உளன்

**18] விடுபட்டதை நிரப்புக.....**

**உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்**

---------------- ----------------- -----------------

1] தீமை இலாத சொலல்

2] நன்மை பயக்கு மெனின்

3] தன்நெஞ்சே தன்னைச் சுடும்

**4] உள்ளத்துள் எல்லாம் உளன்**

**19] விடுபட்டதை நிரப்புக.....**

**மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு**

---------------- ----------------- -----------------

**1] தானம்செய் வாரின் தலை**

2] எல்லா அறமும் தரும்

3] செய்யாமை செய்யாமை நன்று

4] வாய்மையால் காணப் படும்

**20] விடுபட்டதை நிரப்புக.....**

**பொய்யாமை அன்ன புகழ்இல்லை எய்யாமை**

**---------------- ----------------- -----------------**

1] தானம்செய் வாரின் தலை

**2] எல்லா அறமும் தரும்**

3] செய்யாமை செய்யாமை நன்று

4] வாய்மையால் காணப் படும்

**21] விடுபட்டதை நிரப்புக.....**

**பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**

**---------------- ----------------- -----------------**

1] தானம்செய் வாரின் தலை

2] எல்லா அறமும் தரும்

**3] செய்யாமை செய்யாமை நன்று**

4] வாய்மையால் காணப் படும்

**22] விடுபட்டதை நிரப்புக.....**

**புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை**

---------------- ----------------- -----------------

1] தானம்செய் வாரின் தலை

2] எல்லா அறமும் தரும்

3] செய்யாமை செய்யாமை நன்று

**4] வாய்மையால் காணப் படும்**

**23] விடுபட்டதை நிரப்புக.....**

**எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**

---------------- ----------------- -----------------

1] தானம்செய் வாரின் தலை

2] எல்லா அறமும் தரும்

3] செய்யாமை செய்யாமை நன்று

**4] பொய்யா விளக்கே விளக்கு**

**24] விடுபட்டதை நிரப்புக.....**

**யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்**

---------------- ----------------- -----------------

1] தானம்செய் வாரின் தலை

**2] வாய்மையின் நல்ல பிற**

3] செய்யாமை செய்யாமை நன்று

4] பொய்யா விளக்கே விளக்கு

**25] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக..**

1] புரை - குற்றம்

2] பயக்கும் - தரும்

3] சுடும் - வருத்தும்

**4] கேழல் - மான்.**

**குறிப்பு :- கேழல் - பன்றி**

**26] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக..**

1] அன்ன - அவை போல்வன

2] எய்யாமை - வருந்தாமை

**3] அகம் - வெளியே**

4] அமையும் - உண்டாகும்

**குறிப்பு :- அகம் - உள்ளம்**

**27] கீழ்க்கண்ட கூற்று யாரைப்பற்றியது?**

**இவர், சுருங்கச்சொல்லி விளங்க வைப்பதில் வல்லவர். இவரைப்பற்றித் தெளிவான வரலாறு இதுவரையில் கிடைக்க வில்லை. இவருக்கு நாயனார், முதற்பாவலர்,**

**நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர் முதலிய பெயர்கள் உண்டு.**

1] சேக்கிழார்

2] இராமலிங்க அடிகளார்

3] கம்பர்

**4] திருவள்ளுவர்**

**28] திருவள்ளுவர் அவர்களின் காலம்?**

1] கி.மு. 29

2] கி.மு. 30

**3] கி.மு. 31**

4] கி.மு. 32

**29] திருக்குறள் --------------- பிரிவுகளை உடையது?**

1] 1 2] 2 **3] 3** 4] 4

**30] திருக்குறள் --------------- நூல்களுள் ஒன்று.**

1] ஐம்பெரும் காப்பியம்

2] ஐஞ்சிறும் காப்பியம்

3] பதினெண் மேல்க்கணக்கு

**4] பதினெண்கீழ்க்கணக்கு**

**31] ---------------------- நூல், தமிழ்மொழியில்உள்ள அறநூல்களுள் முதன்மையானது.**

1] பெரிய புராணம்

2] சிலப்பதிகாரம்

3] நற்றிணை

**4] திருக்குறள்**

**32] திருக்குறள் ---------------- மொழிகளுள் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளது.**

1] 17

2] 43

3] 99

**4] 107**

**33] மனிதன் மனிதனாக வாழ, மனிதன் மனிதனுக்கு கூறிய அறவுரைதான் --------------------- -?**

1] பெரிய புராணம்

2] சிலப்பதிகாரம்

3] நற்றிணை

**4] திருக்குறள்**

**34] --------------------- கற்பதனால் மனித வாழ்க்கை செம்மையுறும். பண்புகள் வளரும். உலகெலாம் ஒன்றெனும் உயர்குணம் தோன்றும். மனிதர்களிடையே வேறுபாடுகள் மறையும் எல்லா உயிரிடத்தும் அன்பு தழைக்கும்.**

1] பெரிய புராணம்

2] சிலப்பதிகாரம்

3] நற்றிணை

**4] திருக்குறள்**

**35] ------------------------ நூல், உலகம் ஏற்கும் கருத்துகளைக் கொண்டு உள்ளதனால் " உலகப் பொதுமறை" என வழங்கப்படுகிறது.**

1] பெரிய புராணம்

2] சிலப்பதிகாரம்

3] நற்றிணை

**4] திருக்குறள்**

**36] உடலை நீர் தூய்மை செய்யும்; உள்ளத் தூய்மையை வெளிப்படுத்துவது?**

1] இன்னாச்சொல்

**2] வாய்மை**

3] பழிச்சொல்

4] இவற்றில் ஏதுமில்லை

**37] வாய்மை எனப்படுவது யாதெனில் --------------------------?**

**1] மற்றவர்களுக்குத் தீங்கு தராத சொற்களைப் பேசுதல்**

2] புறங்கூறாமை

3] பழி கூறாமை

4] இவற்றில் ஏதுமில்லை

**38] எளிதில் பேசவும், எளிதில் பாடல் இயற்றவும் இயற்கையாக அமைந்தது தென்மொழியாகிய தமிழ் ஒன்றே என்று கூறியவர்?**

1] பாவாணர்

2] மறைமலையடிகள்

3] அகத்தியலிங்கம்

**4] வள்ளலார்**

**39] கிரேக்கம், இலத்தீன், சமற்கிருதம், சீனம், எபிரேயம், அரபு, ஈப்ரு ஆகியவற்றைச் செம்மொழிகள் எனப் பட்டியலிடுகிறார் மொழியியல் அறிஞர் --------------------?**

1] பாவாணர்

2] மறைமலையடிகள்

**3] அகத்தியலிங்கம்**

4] வள்ளலார்

**40] தமிழ்மொழி அழகான சித்திர வேலைப் பாடமைந்த வெள்ளித்தட்டு; திருக்குறள் அதில் வைக்கப்பட்டுள்ள தங்க ஆப்பிள்; தமிழ் என்னை ஈர்த்தது; குறளோ என்னை இழுத்தது. - என்று கூறியவர்?**

1] கால்டுவெல்

2] ஜி.யு. பாப்

3] கெல்லட்

**4] கிரௌல்**

**41] உலகின் மிகப்பழமையான நிலப்பகுதி குமரிக்கண்டம் அந்நிலப்பகுதி கடல்கோளால் மூழ்கிவிட்டது. அத்தொன்னிலத்தில்தான் தமிழ் தோன்றியதெனத் ----------------------------- கூறுகிறது. " ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் – ஆங்கவற்றுள் மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது தன்னே ரிலாத தமிழ் "**

1] தொல்காப்பிய நூற்பா

2] நன்னூல்

**3] தண்டியலங்கார மேற்கோள் செய்யுள்**

4] புறநானூறு

**42] பெற்றோரைக் குறிக்கும் அம்மை, அப்பன் என்னும் சொல் ----------------- நாட்டுத் தமிழ்ச் சொல்.**

1] கொங்கு

**2] நாஞ்சில்**

3] வருச நாடு

4] இவற்றில் ஏதுமில்லை

**43] தமிழ் பிறமொழித் துணையின்றித் தனித்து இயங்குவது மட்டுமன்றித் தழைத்தோங்கவும் செய்யும் - என்று கூறியவர்?**

**1] கால்டுவெல்**

2] ஜி.யு. பாப்

3] கெல்லட்

4] கிரௌல்

**44] எல்லாச்சொல்லும் பொருள் குறித்தனவே என்று கூறும் நூல்?**

**1] தொல்காப்பிய நூற்பா**

2] நன்னூல்

3] தண்டியலங்கார மேற்கோள் செய்யுள்

4] புறநானூறு

**குறிப்பு** :- எல்லாச்சொல்லும் பொருள் குறித்தனவே என்பது தொல்காப்பிய நூற்பா. தமிழில் இடுகுறிப் பெயர்கள் மிகவும் குறைவு. ஒருமை, பன்மை என்னும் இருவகை எண் மட்டுமே தமிழில் உண்டு. ஆனால், வடமொழியில் ஒருமை, இருமை, பன்மையென மூவகை எண் உள்ளன. தமிழில் உயிர்களுக்கு மட்டுமே பால்வேறுபாடு உண்டு;

பொருள்களுக்குப் பால்வேறுபாடு இல்லை. ஆனால், பிறமொழிகளில் இத்தகைய பகுப்புமுறை இல்லை.

**இலக்கண நிறைவு :-** எல்லா மொழிகளும் எழுத்துக்கும் சொல்லுக்கும் இலக்கணம் கூறும். ஆனால், தமிழ் அவற்றுடன் சேர்த்து வாழ்வியலுக்கான பொருளிலக்கணத்தையும் கூறுகிறது. அதனையும் அகம், புறம் என இருவகையாகப் பகுத்துள்ளது.

**செய்யுள் சிறப்பு :-** பண்டைத் தமிழ் இலக்கியங்களும், இலக்கணங்களும் செய்யுள் வடிவிலேயே இருந்தன. கலிப்பா முதலான செய்யுள் வகைகள் வேறு எம்மொழியிலும் இல்லை.

**அணிச்சிறப்பு :-** புலவர்கள் செய்யுளுக்குச் சிறப்புச் சேர்க்க உவமை, உருவகம் முதலிய அணிகளைப் பயன்படுத்திப் பாடல்களை இயற்றியுள்ளார்கள்.

**45] வாழ்வியலுக்கு இலக்கணம் கூறும் மொழி?**

1] வடமொழி

2] இந்தி

3] தெலுங்கு

**4] தமிழ்**

**46] -------------------- அருகே ஊர் என்னும் பெயரில் ஒரு நகரும், ஊர்நம்மு என்னும் ஊரும் உள்ளதாம்.**

1] சிங்கப்பூர்

2] சீனா

3] மொரீசியசு

**4] பாபிலோன்**

**47] ஓங்கி உயர்ந்த நிலப்பகுதி மலை எனவும், மலையின் உயரத்தில் குறைந்ததனைக் ----------------- எனவும், ------------------- இந்த உயரத்தில் குறைந்ததனைக் கரடு எனவும், பாறை எனவும் பெயரிட்டு அழைத்தனர். இவற்றையொட்டி வாழ்ந்த மக்கள், தம்வாழ்விடங்களுடன் ஊர் என்னும் பெயரையும் சேர்த்து ஊர்பெயர்களாக்கினர்.**

**1] குன்று**

2] பாறை

3] மேடு

4] கல்

**48] மலையைக் குறிக்கும் வடசொல் ----------------.**

**1] கிரி**

2] முடி

3] கல்

4] உச்சி

**49] கல்வெட்டுகளில் காணப்படும் மதிரை மருதையாகி இன்று மதுரை யாக மருவியுள்ளது. ---------------------- என்னும் பெயர் கோயமுத்தூர் ஆகி, இன்று கோவையாக மருவியுள்ளது.**

1] கோயம்புத்தூர்

2] கோவலன்புத்தூர்

3] கோவைப்புதூர்

**4] கோவன்புத்தூர்**

**50] சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்?**

1] 5 2] 7 3] 8 **4] 10**

**51] ஆய்தம் ---------------- எழுத்துவகையைச் சார்ந்தது?**

1] முதல் எழுத்து

2] மெய்யெழுத்து

**3] சார்பெழுத்து**

4] இவற்றில் ஏதுமில்லை

**52] முதலெழுத்துக்களின் எண்ணிக்கை -----------------?**

**1] 30** 2] 36 3] 216 4] 217

**53] சாதிகள் இல்லையடி பாப்பா குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] தாராபாரதி

**54] நீதி, உயர்ந்தமதி, கல்வி – அன்பு; நிறைய உடையவர்கள் மேலோர் - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] தாராபாரதி

**55] உயிர்க ளிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்; உண்மையென்று தானறிதல் வேணும் - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] தாராபாரதி

**56] வயிர முடைய நெஞ்சு வேணும் – இது வாழும் முறைமையடி பாப்பா - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] தாராபாரதி

**57] கால்டுவெல் பிறந்த ஆண்டு?**

1] 1755

2] 1800

**3] 1815**

3] 1850

**58] கால்டுவெல் பிறந்த நாடு?**

1] இத்தாலி

2] பிரான்சு

**3] அயர்லாந்து**

4] இங்கிலாந்து

**59] கால்டுவெல் தமிழகத்தில் வாழ்ந்த இடம் ?**

**1] இடையன்குடி (திருநெல்வேலி)**

2] சாத்தூர் (விருதுநகர்)

3] கொடைக்கானல் (திண்டுக்கல்)

4] மன்னார்குடி (திருவாரூர்)

**60] திராவிட மொழிகளின் தாய் 'தமிழ்' என உலகுக்குப் பறைசாற்றியவர்?**

1] ஜி.யு.போப்

**2] கால்டுவெல்**

3] வால்ட் விட்மன்

4] சேக்சுபியர்

**61] திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் - என்ற நூலின் ஆசிரியர் யார்?**

1] ஜி.யு.போப்

**2] கால்டுவெல்**

3] வால்ட் விட்மன்

4] சேக்சுபியர்

**62] கால்டுவெல் மறைந்த ஊர்?**

1] இடையன்குடி (திருநெல்வேலி)

2] சாத்தூர் (விருதுநகர்)

**3] கொடைக்கானல் (திண்டுக்கல்)**

4] மன்னார்குடி (திருவாரூர்)

**63] கால்டுவெல் மறைந்த ஆண்டு?**

1] 1875

2] 1781

3] 1881

**4] 1891**

## ஏழாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 2

**1] நெல்லும் உயிரன்றே நீரும்உயி ரன்றே; மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] நான்மணிக்கடிகை, விளம்பிநாகனார்

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**3] புறநானூறு, மோசிகீரனார்**

4] சிறுபஞ்சமூலம், காரியாசான்

**2] அதனால் யான்உயிர் என்பது அறிகை; வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] நான்மணிக்கடிகை, விளம்பிநாகனார்

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**3] புறநானூறு, மோசிகீரனார்**

4] சிறுபஞ்சமூலம், காரியாசான்

**3] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] அறிகை – அறிதல் வேண்டும்

2] தானை – படை

3] கடனே – கடமை

**4] கேண்மை - பகைமை**

**குறிப்பு :- கேண்மை - நட்பு**

**4] உடல் சோர்வினால் அரசுக்குரிய முரசுக் கட்டிலில் உறங்கியபோது, ------------------------ என்ற அரசனால் கவரிவீசப் பெற்ற பெருமைக்குரியவர், மோசிகீரனார்.**

1] சேரன் செங்குட்டுவன்

2] இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

3] பெருமாள் பாஸ்கர ரவிவர்மா

**4] சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை**

**குறிப்பு** :- மோசிகீரனார், தென்பாண்டி நாட்டிலுள்ள மோசி என்னும் ஊரில் வாழ்ந்தவர். கீரன் என்பது குடிப்பெயராகக் குறிப்பிடபடுகிறது. இவர் பாடிய பாடல்கள் அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகியவற்றுள் உள்ளன.

**5] புறநானூறு --------------------- நூல்களுள் ஒன்று.**

**1] எட்டுத்தொகை**

2] பத்துப்பாட்டு

3] ஐம்பெரும் காப்பியங்கள்

4] ஐம்சிறும் காப்பியங்கள்

**குறிப்பு** :- புறம் என்பது மறம் செய்தலும் அறம் செய்தலும் ஆகும். இந்நூலில் உள்ள பாடல்கள் பல்வேறு காலங்களில் பல்வேறு இடங்களில் வாழ்ந்த புலவர்களாலும் மன்னர்களாலும் பாடப்பெற்றவை. புறநானூற்றுப் பாடல்கள் மூலம் பண்டைய தமிழக மன்னர்களின் அற உணர்வு, வீரம், கொடை, ஆட்சிச் சிறப்பு, கல்விப் பெருமை

முதலியவற்றையும், புலவர்களின் பெருமிதம், மக்களுடைய நாகரிகம், பண்பாடு முதலியவற்றையும் அறியலாம்.

**6] கீழ்க்கண்டவற்றுள் அரசனைக் குறிக்காத பெயர் எது?**

1] மன்னன்

2] வேந்தன்

**3] அமரன்**

4] கோ

**7] ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்; ஓதலில் சிறந்தன்(று) ஒழுக்கம் உடைமை; காதலில் சிறந்தன்று கண்ணஞ்சப் படுத்தல் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] நான்மணிக்கடிகை, விளம்பிநாகனார்

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

3] புறநானூறு, மோசிகீரனார்

**4] முதுமொழிக்காஞ்சி, மதுரைக் கூடலூர்கிழார்**

**8] மேதையில் சிறந்தன்று கற்றது மறவாமை; வண்மையில் சிறந்தன்று வாய்மை யுடைமை - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] நான்மணிக்கடிகை, விளம்பிநாகனார்

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

3] புறநானூறு, மோசிகீரனார்

**4] முதுமொழிக்காஞ்சி, மதுரைக் கூடலூர்கிழார்**

**9] இளமையில் சிறந்தன்று மெய்பிணி இன்மை; நலனுடை மையின் நாணுச் சிறந்தன்று - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] நான்மணிக்கடிகை, விளம்பிநாகனார்

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

3] புறநானூறு, மோசிகீரனார்

**4] முதுமொழிக்காஞ்சி, மதுரைக் கூடலூர்கிழார்**

**10] குலனுடை மையின் கற்புச் சிறந்தன்று; கற்றலின் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] நான்மணிக்கடிகை, விளம்பிநாகனார்

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

3] புறநானூறு, மோசிகீரனார்

**4] முதுமொழிக்காஞ்சி, மதுரைக் கூடலூர்கிழார்**

**11] செற்றாரைச் செறுத்தலில் தற்செய்கை சிறந்தன்று; முன்பெரு கலின்பின் சிறுகாமை சிறந்தன்று - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] நான்மணிக்கடிகை, விளம்பிநாகனார்

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

3] புறநானூறு, மோசிகீரனார்

**4] முதுமொழிக்காஞ்சி, மதுரைக் கூடலூர்கிழார்**

**12] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] ஆர்கலி – நிறைந்த ஓசையுடைய கடல்

2] காதல் – அன்பு, விருப்பம்

3] மேதை – அறிவு நுட்பம்

**4] வண்மை – தீமை**

**குறிப்பு :- வண்மை – ஈகை, கொடை**

**13] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] பிணி – நோய்

2] மெய் – உடம்பு

3] நாணம் – செய்யக் கூடாதனைச் செய்ய அச்சப்படுதல்

**4] கேண்மை - தீமை**

**குறிப்பு :- கேண்மை - நட்பு**

**14] கீழ்க்கண்ட கூற்று யாரைப்பற்றியது?**

**இவர் பிறந்த ஊர் கூடலூர். இவர்தம் பாடல்களை நச்சினார்க்கினியர் முதலிய நல்லுரையாசிரியர்கள் மேற்கோள்களாகக் கையாண்டுள்ளார்கள். இவர் சங்க காலத்துக்குப்பின் வாழ்ந்தவர்.**

1] விளம்பிநாகனார்

2] முன்றுறை அரையனார்

3] மோசிகீரனார்

**4] மதுரைக் கூடலூர்கிழார்**

**15] முதுமொழிக்காஞ்சி என்பது -----------------திணையின் துறைகளுள் ஒன்று.**

1] வஞ்சி

2] நொச்சி

3] தும்பை

**4] காஞ்சி**

**16] முதுமொழிக்காஞ்சி --------------------- நூல்களுள் ஒன்று.**

**1] பதினெண்கீழ்க்கணக்கு**

2] பதினெண் மேல்க்கணக்கு

3] ஐம்பெரும் காப்பியங்கள்

4] ஐஞ்சிறும் காப்பியங்கள்

**17] ------------------------- நூல், அறவுரைக்கோவை எனவும் வழங்கப்படுகிறது.**

1] நான்மணிக்கடிகை

2] பழமொழி நானூறு

3] புறநானூறு

**4] முதுமொழிக்காஞ்சி**

**18] முதுமொழிக்காஞ்சி நூலில் ------------------ பாடல்கள் உள்ளன.**

1] 10 2] 40 3] 80 **4] 100**

**குறிப்பு :-** முதுமொழிக்காஞ்சி நூலில் பத்து அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வோர் அதிகாரத்திலும் பத்துச் செய்யுள்கள் உள்ளன. இந்நூல் நூறு பாடல்களால் ஆனது.

**19] ------------------------- நூல் கற்போரின் குற்றங்களை நீக்கி, அறம், பொருள், இன்பங்களை அடைவதற்கான வழிமுறைகளை அறவுரைகளாகக் கூறி நல்வழிப்படுத்தும்.**

1] நான்மணிக்கடிகை

2] பழமொழி நானூறு

3] புறநானூறு

**4] முதுமொழிக்காஞ்சி**

**20] யார் காப்பர் என்று தமிழன்னை ஏங்கிய போது நான் காப்பேன் என்று எழுந்தார் ஒருவர் அவர்தாம் ---------------.**

1] திரு.வி.க

2] மறைமலையடிகள்

**3] உ.வே.சாமிநாதர்**

4] பாவாணர்

**21] கீழ்க்கண்டவர்களுள் யார் தமிழ்த்தாத்தா என்று அழைக்கப்படுகிறார்?**

1] திரு.வி.க

2] மறைமலையடிகள்

**3] உ.வே.சாமிநாதர்**

4] பாவாணர்

**22] கீழ்க்கண்டவர்களுள் யார் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனாரின் மாணவர்?**

1] திரு.வி.க

2] மறைமலையடிகள்

**3] உ.வே.சாமிநாதர்**

4] பாவாணர்

**23] கீழ்க்கண்ட கூற்று யாருடன் தொடர்புடையது?**

**இவர், நயமும் சுவையும் மிக்க பாடல்களை இயற்றிப் புதுப்புது நூல்களைப் படைத்தளித்தார். தமிழ்ப்பாடம் சொல்லிச்சொல்லி மாணவர்களைத் தமிழின்பால்**

**ஈர்த்தார். அதனால், மாணவர்கள் தமிழின்மீது தீராக்காதல் கொண்டு தமிழை ஈடுபாட்டுடன் கற்றார்கள். அம்மாணவர்கள் தேமதுரத் தமிழை உலகெலாம் பரவச் செய்தார்கள்.**

1] வேங்கட மகாலிங்கம்

2] மறைமலையடிகள்

**3] மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்**

4] பாவாணர்

**24] மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் அவர்கள் பிறந்த ஆண்டு?**

1] 06.04.1805

2] 04.06.1815

**3] 06.04.1815**

4] 04.06.1850

**25] மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் அவர்கள் பிறந்த ஊர்?**

1] திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த வத்தலக்குண்டு

2] தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த நாகலாபுரம்

3] திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த நீடாமங்கலம்

**4] திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த எண்ணெய்க்கிராமம்**

**26] மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் அவர்கள் பெற்றோர் பெயர்?**

1] முத்தையா - விசாலாட்சி

2] வெங்கட்ராமன் - அம்மணி அம்மாள்

**3] சிதம்பரம் – அன்னத்தாச்சியார்**

4] இவர்களில் யாருமில்லை

**27] மீனாட்சிசுந்தரனார் திருமணம் செய்துகொண்டு குடும்பத்துடன் ------------------ ஊரில் வாழ்ந்தார்.**

1] சைதாப்பேட்டை (சைதை)

2] மன்னார்குடி (மன்னை)

3] மயிலாடுதுறை (மயிலை)

**4] திரிசிரபுரத்தில் ( திருச்சிராப்பள்ளி )**

**குறிப்பு :- மீனாட்சிசுந்தரனார் திருமணம் செய்துகொண்டு குடும்பத்துடன் திரிசிரபுரத்தில் ( திருச்சிராப்பள்ளி ) வாழ்ந்தார். அதனால், அவரைத் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரனார் என்றே அழைத்தனர். அவரிடம், கற்க வேண்டும் என்ற வேட்கை தணியாததாக இருந்தது.**

**28] மீனாட்சிசுந்தரனார் எப்பொழுதும் நூல்களைப் படித்துக்கொண்டே இருப்பார். அவர் தமிழ் இலக்கியத்திலும் ------------ சமய நூல்களிலும் ஆர்வம் கொண்டிருந்தார்.**

**1] சைவம்**

2] வைணவம்

3] பௌத்தம்

4] சமண

**29] கீழ்க்கண்ட கூற்று யாரைப்பற்றியது?**

**இவர், தமிழ் கற்கவேண்டுமென்று விரும்பியவர்களுக்கெல்லாம் கற்றுக் கொடுத்து வந்தார்; சாதி, சமயம் பாராது அனைவருக்கும் கல்வி கற்பித்து வந்தார். இவர், பெருஞ் செல்வராக இல்லை என்றாலும், மாணவர் சிலருக்கு உண்டியும் உறையுளும் அளித்துக் கற்பித்திருக்கிறார். அதன் காரணமாக அவருடைய புகழ் எங்கும் பரவியது. குலாம்காதர் நாவலர், சவரிராயலு, தியாகராசர், சாமிநாதர் ஆகியோர், அவர்களுள் குறிப்பிடத்தக்க மாணவர்கள்.**

1] வேங்கட மகாலிங்கம்

2] மறைமலையடிகள்

**3] மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்**

4] பாவாணர்

**30] ----------------- என்ற ஊரில் ஆதீன வித்துவானாக இருக்க வேண்டும் என்று ஆதீனத் தலைவர், மீனாட்சிசுந்தரனாருக்கு அழைப்பு விடுத்தார். மீனாட்சிசுந்தரனார் அப்பதவியில் சிலகாலம் இருந்து அரும்பணி ஆற்றினார்.**

1] திருத்துறைப்பூண்டி

2] திருச்செந்தூர்

3] திருத்தணி

**4] திருவாவடுதுறை**

**31] ------------------ என்ற ஊரில் வாழ்ந்த காலத்தில் தான் உ.வே.சாமிநாதருக்கு ஆசிரியராக இருந்தார், மீனாட்சிசுந்தரனார்.**

1] திருத்துறைப்பூண்டி

2] திருச்செந்தூர்

3] திருத்தணி

**4] திருவாவடுதுறை**

**32] இந்த கூற்று யாருடன் தொடர்புடையது?**

**இவர், தம்வாழ்வின் பெரும்பகுதியை, மாணவர்களுக்குக் கற்பிப்பதிலேயே செலவழித்தார். கற்பித்ததால் அவருடைய அறிவும் வளந்தது. மாணவர்களுக்குப் பாடம் சொல்லும் போது அவர் ஏடுகளைப் பார்க்கவே மாட்டார். அவற்றிலுள்ள அனைத்தும் அவருக்கு மனப்பாடமாகவே இருந்தன.**

1] வேங்கட மகாலிங்கம்

2] மறைமலையடிகள்

**3] மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்**

4] பாவாணர்

**33] மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார், ------------------ க்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார். தமிழகத்திலுள்ள பல்வேறு கோவில்களுக்கு நடைப்பயணம் மேற் கொண்டு அக்கோவில்களைப் பற்றித் தலபுராணங்கள் பல இயற்றியுள்ளர். அத்தல**

**புராணங்களில் கோவில் வரலாறு, சிறப்புகள், இறைவனின் பெருமைகள் முதலியன இடம்பெற்றுள்ளன.**

**1] 80**

2] 800

3] 1800

4] 8000

**34] இந்த கூற்று யாருடன் தொடர்புடையது?**

**ஒருமுறை இவருடைய நண்பர் ஆறுமுகம் என்பவர், தம்முடைய குடும்பத் தொடர்பாகக் கும்பகோணத்தில் ஒருவருக்குப் பத்திரம் ஒன்று எழுதிக் கொடுத்தார். அதில், சாட்சிக் கையொப்பமிட வந்த ஒருவருடைய இருப்பிடம் கும்பகோணத்திலுள்ள சுண்ணாம்புக்காரன் தெரு என்பது. அதனை நீற்றுக்காரத் தெரு எனவும் வழங்குவர். இந்த இரண்டில் எதனைப் பெயருக்கு முன்னால் சேர்க்கலாம் என்று அவர் கேட்டபொழுது , -------------- என்பவர் இரண்டும் வேண்டாம், மூன்றாவது தெரு என்று போட்டுவிடும் என்று சொன்னார். மூன்றாவது என்பது சுண்ணாம்பைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். (வெற்றிலை + பாக்கு +சுண்ணாம்பு )**

1] வேங்கட மகாலிங்கம்

2] மறைமலையடிகள்

**3] மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்**

4] பாவாணர்

**35] இந்த கூற்று யாருடன் தொடர்புடையது?**

**ஒருநாள் இவர், காய்ச்சலுற்றுத் துன்புற்றார். அப்பொழுது மாணவர் ஒருவரை நூல் முழுவதனையும் தொடர்ந்து படிக்குமாறு கேட்டார். உடல்நிலை சரியில்லாதபோது சற்று ஓய்வெடுத்தால் நல்லதென்று மற்றவர் கூற, நோய்க்கு மருந்து இலக்கியம் என்றார்.**

1] வேங்கட மகாலிங்கம்

2] மறைமலையடிகள்

**3] மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்**

4] பாவாணர்

**36] மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் அவர்கள் மறைந்த வருடம்?**

1] 01.02.1786

2] 10.12.1886

3] 10.02.1786

**4] 01.02.1876**

**37] "தொப்புள்கொடி உறவுகள் அறுந்து போகாமல் காப்பது தாய்மொழி மாத்திரமே. பிற மொழிகள் பிழைபதற்கு; தாய் மொழி ஒன்றே வாழ்வதற்கு! - என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] வால்ட் விட்மன்

2] சேக்சுபியர்

3] ஜி.யு.போப்

**4] உருசிய கவிஞர் ரசூல் கம்சதேவ்**

**38] நாளை என் மொழி சாகுமானால் இன்றே நான் இறந்து விடுவேன்!" - என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] வால்ட் விட்மன்

2] சேக்சுபியர்

3] ஜி.யு.போப்

**4] உருசிய கவிஞர் ரசூல் கம்சதேவ்**

**39] சொல்லத் துடிக்குது மனசு - என்ற நூலின் ஆசிரியர் யார்?**

1] ராஜம் கிருஷ்ணன்

2] சுஜாதா

**3] வீ.கே.டி. பாலன்**

4] நவநீதன்

**40] அறம் பெருகும் தமிழ் படித்தால்! அகத்தில் ஒளி பெருகும்! திறம் பெருகும்! உரம் பெருகும்! தீமைக் கெதிர் நிற்கும்! - என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

2] தாரா பாரதி

3] வாணிதாசன்

4] அப்துல் ரகுமான்

**41] அறம் பெருகும் ஆண்மை வரும் ; மருள் விலகிப் போகும்! புறம் பெயரும் பொய்மை எலாம்! புதுமை பெரும் வாழ்வே - என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

2] தாரா பாரதி

3] வாணிதாசன்

4] அப்துல் ரகுமான்

**42] நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, திருவள்ளுவமாலை ஆகியவற்றில் கோவூர்கிழார் அவர்களின் -----------------பாடல்கள் இடம்பெற்றுள்ளன.**

1] 8 2] 10 **3] 18** 4] 20

**43] பனம்பூ மாலை --------- என்பவருடன் தொடர்புடையது.**

**1] சேரர்**

2] சோழர்

3] பாண்டியர்

4] பல்லவர்

**44] வேப்பம்பூ மாலை --------- என்பவருடன் தொடர்புடையது.**

1] சேரர்

2] சோழர்

**3] பாண்டியர்**

4] பல்லவர்

**45] ஆத்திமாலை ---------- என்பவருடன் தொடர்புடையது.**

1] சேரர்

**2] சோழர்**

3] பாண்டியர்

4] பல்லவர்

**46] இளந்தத்தனாரைச் சிறை மீட்ட செம்மல் யார்?**

1] நச்சினார்க்கினியர்

2] வள்ளல் சீதக்காதி

**3] கோவூர்கிழார்**

4] இவர்களில் யாருமில்லை

**47] இந்த கூற்று எந்த எழுத்துடன் தொடர்புடையது?**

**அஃகேனம், முப்புள்ளி, முப்பாற்புள்ளி, தனிநிலை, ஆய்தம் - என்று கூறப்படும் எழுத்து. ஒரு சொல்லின் இடையில் மட்டுமே வரும். அவ்வெழுத்தின் முன் குறிலும் அதன்பின் வல்லின உயிர்மெய்க் குறிலும் வரும்.**

1] ஈ 2] ஊ 3] ஓ **4] ஃ**

**48] சோழர்களின் தலைநகராக விளங்கிய உறையூர், திருச்சிக்கு அருகில் அமைந்துள்ள பண்டைய நகரமாகும். இவ் உறையூர் முற்காலத்தில் ---------------- என்று அழைக்கப்பட்டது.**

1] கொங்கு மண்டலம்

**2] கோழிமாநகரம்**

3] சோழமண்டலம்

4] இவற்றில் ஏதுமில்லை

**49] தாயுமானவருக்கு ஞானநெறி காட்டியவர்?**

1] நச்சினார்க்கினியர்

2] போகர்

3] காலங்கிநாதர்

**4] மௌனகுரு**

**50] தமிழின் முதல் சிறுகதை எழுத்தாளர்?**

1] ஜெயகாந்தன்

2] சுஜாதா

3] ராஜம் கிருஷ்ணன்

**4] வ.வே.சுப்பிரமணியம்**

**51] ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே; சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே; - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல்?**

1] சீவகசிந்தாமணி

2] மணிமேகலை

**3] புறநானூறு**

4] அகநானூறு

**52] வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே; நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே, - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல்?**

1] சீவகசிந்தாமணி

2] மணிமேகலை

**3] புறநானூறு**

4] அகநானூறு

**53] ஒளிறு வாள் அருஞ் சமம் முருக்கி, களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல்?**

1] சீவகசிந்தாமணி

2] மணிமேகலை

**3] புறநானூறு**

4] அகநானூறு

## ஏழாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 3

**1] ஓடும் சுழிசுத்தம் உண்டாகும் துன்னலரைச் சாடும் பரிவாய்த் தலைசாய்க்கும் – நாடறியத் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் யார்?**

1] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

2] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

**3] இரட்டுறமொழிதல், காளமேகப் புலவர்**

4] புறநானூறு, கண்ணகனார்

**2] தேடு புகழான் திருமலைரா யன்வரையில் ஆடுபரி காவிரியா மே - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் யார்?**

1] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

2] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

**3] இரட்டுறமொழிதல், காளமேகப் புலவர்**

4] புறநானூறு, கண்ணகனார்

**3] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] துன்னலர் – பகைவர், அழகிய மலர்

**2] பரிவாய் – கோபமாய்**

3] சாடும் – தாக்கும், இழுக்கும்

4] ஆடுபரி – ஆடுகின்ற குதிரை

**குறிப்பு :- பரிவாய் – அன்பாய்**

**4] காளமேகப்புலவர் அவர்கள் பிறந்த ஊர்?**

1] தஞ்சாவூருக்கு அருகில் உள்ள சிதம்பரம் எனவும், விருதுநகர் மாவடத்திலுள்ள சாத்தூர் எனவும் கூறுவர்

2] சென்னைக்கு அருகில் உள்ள எண்ணூர் எனவும், காஞ்சிபுரம் மாவடத்திலுள்ள திருப்பெரும்புதூர் எனவும் கூறுவர்

**3] கும்பகோணத்துக்கு அருகில் உள்ள நந்திக்கிராமம் எனவும், விழுப்புரம் மாவடத்திலுள்ள எண்ணாயிரம் எனவும் கூறுவர்**

4] மன்னார்குடிக்கு அருகில் உள்ள நீடாமங்கலம் எனவும், திருவண்ணாமலை மாவடத்திலுள்ள ஆரணி எனவும் கூறுவர்

**5] காளமேகப்புலவர் அவர்களின் இயற்பெயர்?**

1] சுப்புராம்

2] முத்துராஜ்

**3] வரதன்**

4] செண்பகக்குட்டி

**6] இந்த கூற்று யாருடன் தொடர்புடையது?**

**திருவரங்கக் கோவில் மடைப்பள்ளியில் பணிபுரிந்தார். வைணவ சமயத்தில் இருந்து சைவசமயத்திற்கு மாறினார்.**

1] முன்றுறை அரையனார்

2] விளம்பி நாகனார்

**3] காளமேகப் புலவர்**

4] கண்ணகனார்

**குறிப்பு :- கார்மேகம் போல் கவிதை பொழியும் ஆற்றல் பெற்றதால், இவர் காளமேகப்புலவர் என அழைக்கப் பெற்றார். இவர், இருபொருள் அமைய நகைச்சுவையுடன் பாடுவதில் வல்லவர்.**

**7] கற்றதுகைம் மண்ணளவு கல்லா(து) உலகளவென்(று) உற்ற கலைமடந்தை ஓதுகிறாள் – மெத்த - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] முன்றுறை அரையனார்

2] விளம்பி நாகனார்

3] காளமேகப் புலவர்

**4] ஔவையார்**

**குறிப்பு :- இங்குக் குறிக்கப்படும் ஔவையார், சங்க கால ஔவையாருக்கு மிகவும் பிற்பட்டவர். கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்திப்புலவர் முதலிய புலவர்கள் இவர் காலத்தில் வாழ்ந்ததாகக் கூறுவர்.**

**8] வெறும்பந் தயம்கூற வேண்டா; புலவீர் எறும்புந்தன் கையால்எண் சாண் - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] முன்றுறை அரையனார்

2] விளம்பி நாகனார்

3] காளமேகப் புலவர்

**4] ஔவையார்**

**குறிப்பு :- இங்குக் குறிக்கப்படும் ஔவையார், சங்க கால ஔவையாருக்கு மிகவும் பிற்பட்டவர். கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்திப்புலவர் முதலிய புலவர்கள் இவர் காலத்தில் வாழ்ந்ததாகக் கூறுவர்.**

**9] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] கைம்மண்ணளவு – ஒரு சாண் எனவும் பொருள் கொள்வர்

**2] மெத்த – குறைவாக**

3] பந்தயம் – போட்டி

4] கலைமடந்தை – கலைமகள்

**குறிப்பு :- மெத்த – மிகுதியாக**

**10] புலவர் பலர், பல்வேறு சூழ்நிலைக்கு ஏற்ப அவ்வப்போது பாடிய பாடல்களின் தொகுப்பே தனிப்பாடல் திரட்டு. இதனை, இராமநாதபுரம் மன்னர் பொன்னுசாமி வேண்டுதலுக்கிணங்க, -------------------- தமிழகம் முழுவதும் சென்று தேடித் தொகுத்தார்.**

1] சுத்தானந்த பாரதியார்

2] வேங்கட மகாலிங்கம்

3] மறைமலையடிகள்

**4] சந்திரசேகர கவிராசப் பண்டிதர்**

**11] கணிதமேதை எனப் போற்றப்படும் இராமானுஜம் ஈரோட்டில் வாழ்ந்துவந்த ------------------ இணையருக்கு மகனாகப் பிறந்தார்.**

1] சாத்தப்பன் - விசாலாட்சி

**2] சீனிவாசன் – கோமளம்**

3] முத்தையா - சோலையம்மாள்

4] வெங்கட்ராமன் - அம்மணி அம்மாள்

**12] கணிதமேதை எனப் போற்றப்படும் இராமானுஜம் பிறந்த வருடம் ----------?**

1] 10.12.1882

2] 12.12.1885

3] 12.12.1886

**4] 22.12.1887**

**13] கணிதமேதை எனப் போற்றப்படும் இராமானுஜம் ---------------- ஆண்டுகள் பேசும் திறனற்றவராக இருந்தார்.**

1] 1 2] 2 **3] 3** 4] 4

**14] இராமானுஜத்தின் தாயார், தம் தந்தையார் வாழ்ந்து வந்த ------------------ ஊரில் இருந்த திண்ணைப் பள்ளியொன்றில், இராமானுஜம் அவர்களை சேர்த்தார்.**

1] செங்கல்பட்டு

2] தாம்பரம்

3] மயிலாடுதுறை

**4] காஞ்சிபுரம்**

**15] கோமளத்தின் தந்தையார் ( இராமானுஜத்தின் தாத்தா ), பணியின்காரணமாக --------------------- ஊருக்கு குடும்பத்துடன் குடியேறினார். எனவே, இராமானுஜத்தின் கல்வி அந்த ஊரிலும் தொடர்ந்தது.**

1] செங்கல்பட்டு

2] தாம்பரம்

3] மயிலாடுதுறை

**4] கும்பகோணம்**

**16] ------------- ஆம் ஆண்டில் இலண்டனிலிருந்த கார் என்பவர் பதினைந்தாம் வயதிலேயே கணிதத்தில் சிறந்து விளங்கியதனைப்போல இராமானுஜமும் சிறந்து விளங்கினார்.**

1] 1700

2] 1750

3] 1800

**4] 1880**

**17] கணித மேதை இராமானுஜம் அவர்கள் தொடக்கத்தில் செய்த வேலை?**

1] வங்கி அலுவலர்

2] தலைமைச்செயலக அலுவலர்

3] தபால் துறை வேலை

**4] சென்னைத் துறைமுகத்தில் எழுத்தர் பணி**

**18] தான் கண்டுபிடித்த தேற்றங்களையும், எடுகோள்களையும் வினாக்களாகத் தொகுத்து இந்தியக் கணிதக் கழகப் பத்திரிக்கைக்குச் சென்னைத் துறைமுகத்தின் தலைமைப்பொறியாளர் ஃபிரான்சிஸ் ஸ்பிரிங் என்பார் மூலம் அனுப்பினார். ----------------------- எனும் தலைப்பில் வெளியான அவருடைய கட்டுரை, கணித வல்லுநர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது.**

1] இயற்கணிதம்

**2] பெர்னௌலிஸ் எண்கள்**

3] வெக்டர் கணிதம்

4] இவற்றில் ஏதுமில்லை

**19] இராமானுஜம் அவர்கள், ஊதியமில்லா விடுப்பு எடுத்துக் கொண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மாணவராகச் சேர்ந்தார். தம்முடைய கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகள் ஆகியவற்றை விவரமாக எழுதி, இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பேராசிரியர் ------------- என்பருக்கு கடிதமாக அனுப்பினார்.**

1] ரோசர்ஸ்

2] ஆர்தர் பெர்சி

**3] ஹார்டி**

4] ஈ.எச்.நெவில்

**20] இலண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள திரினிட்டி கல்லூரியின் பேராசிரியர் ------------- சென்னைப் பல்கலைக்கழகத்திற்குச் சொற்பொழிவாற்ற வந்தார். அவர் வாயிலாகச் செய்தியறிந்து, இராமானுஜம் இங்கிலாந்து செல்ல முடிவெடுத்தார்.**

1] ரோசர்ஸ்

2] ஆர்தர் பெர்சி

3] ஹார்டி

**4] ஈ.எச்.நெவில்**

**21] இராமானுஜம், ----------------- ஆம் நாள் இங்கிலாந்துக்குக் கப்பலில் புறப்பட்டார்.**

1] 1908 ஆம் ஆண்டு மார்ச்சு 08

2] 1910 ஆம் ஆண்டு மார்ச்சு 10

**3] 1914 ஆம் ஆண்டு மார்ச்சு 17**

4] 1922 ஆம் ஆண்டு மார்ச்சு 22

**22] 'திரினிட்டி கல்லூரியில்' ஆராய்ச்சி மாணவராக -------------- ஆம் ஆண்டு சேர்ந்தார்.**

1] 18.01.1911

2] 18.02.1912

3] 18.03.1913

**4] 18.04.1914**

**23] இராமானுஜத்தின் கணிதத் திறமையைக் கண்டு, அவருக்கு ஆண்டொன்றுக்கு -------------- பவுண்டு உதவித்தொகை வழங்கப்பட்டது.**

1] 300 2] 200 3] 100 **4] 60**

**24] ஒரு நாள் கிங்ஸ் கல்லூரிக் கணிதப் பேராசிரியர் -----------------, கேம்பிரிட்ஜ் மாணவர்களுக்குச் சிறப்புக் கணிதம் நடத்திக் கொண்டிருந்தார். திடீரென, இராமானுஜம் எழுந்து, 'ஐயா, நீங்கள் கணக்கிட்ட வழிமுறைகள் முறையாக இல்லையென எனக்குத் தோன்றுகிறது என்றார்.**

1] ரோசர்ஸ்

**2] ஆர்தர் பெர்சி**

3] ஹார்டி

4] ஈ.எச்.நெவில்

**25] ரோசர்ஸ் இராமானுஜம் கண்டுபிடிப்புகள் என்னும் தலைப்பில் இராமானுஜத்தின் வழிமுறைகளை நூலாக வெளியிட்டு அவருக்குப் பெருமை சேர்த்தவர் யார்?**

1] ரோசர்ஸ்

2] ஆர்தர் பெர்சி

**3] ஹார்டி**

4] ஈ.எச்.நெவில்

**26] இராமானுஜத்தின் திறமையை அறிந்த இங்கிலாந்துப் பல்கலைக்கழகம் ---------------- ஆம் ஆண்டு பிப்ரவரியில் தங்கள் கழகத்தில் உறுப்பினராக்கி எஃப்.ஆர்.எஸ். பட்டம் வழங்கியது.**

1] 1915

2] 1916

3] 1917

**4] 1918**

**குறிப்பு :- இப்பட்டம் (எஃப்.ஆர்.எஸ்), ஒருவரது திறமைகள் பிறர் வியக்கத்தக்கவகையில் இருந்தால் மட்டுமே வழங்கப்படுவதாகும்.**

**27] இராமானுஜத்தின் திறமையை அறிந்த எந்த பல்கலைக்கழகமானது அவருக்கு எஃப்.ஆர்.எஸ் பட்டத்தை வழங்கியது?**

1] கொலம்பியா பல்கலைக்கழகம்

2] கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம்

3] சென்னை பல்கலைக்கழகம்

**4] இங்கிலாந்து பல்கலைக்கழகம்**

**28] எஃப்.ஆர்.எஸ். பட்டம் பெற்ற இராமானுஜத்தைத் ---------------------- பாராட்டிச் சிறப்பித்தது.**

**1] திரினிட்டி கல்லூரி**

2] கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம்

3] சென்னை பல்கலைக்கழகம்

4] இங்கிலாந்து பல்கலைக்கழகம்

**29] எஃப்.ஆர்.எஸ். பட்டம் பெற்ற இராமானுஜத்தைத் திரினிட்டி கல்லூரி பாராட்டிச் சிறப்பித்தது. கல்விக்குழுவின் சிறப்பு உறுப்பினராகவும் தேர்ந்தெடுத்து ஆண்டுதோறும் ------------ பவுண்டுத் தொகையை ------------------ ஆண்டுகளுக்கு வழங்கவும் ஏற்பாடு செய்தது.**

1] 500, 2

2] 200, 2

3] 100, 3

**4] 250, 6**

**30] ஹார்டியின் பரிந்துரையின்பேரில் சென்னைப் பல்கலைக்கழகமும், இராமானுஜம் அவர்களுக்கு ---------------- பவுண்டுத் தொகையை ஐந்து ஆண்டுகளுக்குக் கொடுக்க முன்வந்தது.**

1] 100

2] 150

3] 200

**4] 250**

**குறிப்பு :- ஹார்டியின் பரிந்துரையின்பேரில் சென்னைப் பல்கலைக்கழகமும் 250 பவுண்டுத் தொகையை ஐந்து ஆண்டுக்குக் கொடுக்க முன்வந்தது. ஆனால், இராமானுஜம் 50 பவுண்டைத் தம் பெற்றோருக்கும் 200 பவுண்டை ஏழை எளிய மாணவர்களுக்கும் வழங்கி வருமாறு கடிதம் எழுதினார்.**

**31] ராமானுஜம் அவர்களை காணவந்த ----------------- என்பவர், நான் 1729 என்ற எண் கொண்ட வாடகை மகிழுந்தில் வந்தேன் எனக் கூற, என்ன இப்படி இயல்பாகக் கூறுகீர்களே 1729 என்ற எண் இருவகைகளிலே இரு கனங்களின் கூட்டுத்தொகையாக வரும் எண்களில் மிகச்சிறிய எண் அல்லவா? எனக் கேட்டார்.**

1] ரோசர்ஸ்

2] ஆர்தர் பெர்சி

**3] ஹார்டி**

4] ஈ.எச்.நெவில்

**குறிப்பு :- எங்கே அதனை விளக்குங்கள் என ஹார்டி கேட்க, 7 x 13 x 19 என்றோ பிரிக்கலாமே என உடனடியாகப் பதில் கூறினார்.**

**32] ராமானுஜம் அவர்கள் இந்தியாவிற்கு திரும்ப முடிவுசெய்து, ------------------- மும்பைக்குக் கப்பலில் வந்து இறங்கினார். ஏப்ரலில் சென்னை வந்து சேர்ந்தார்.**

1] 1917 மார்ச் 21 ஆம் நாள்

2] 1918 மார்ச் 23 ஆம் நாள்

**3] 1919 மார்ச் 27 ஆம் நாள்**

4] 1920 மார்ச் 30 ஆம் நாள்

**33] மூன்று ஆண்டாகத் தீராத நோயுடன் போராடிய இராமானுஜத்தின் உயிர் பிரிந்தது. அப்போது அவருக்கு வயது முப்பத்து மூன்று.**

1] 1919 ஏப்ரல் 20 ஆம் நாள்

2] 1918 ஏப்ரல் 22 ஆம் நாள்

3] 1919 ஏப்ரல் 24 ஆம் நாள்

**4] 1920 ஏப்ரல் 26 ஆம் நாள்**

**34] ஆய்லராக இல்லாவிட்டாலும் இராமானுஜன் குறைந்தபட்சம் ஒரு ஜாகோபி - என்று கூறியவர் யார்?**

1] இந்திரா காந்தி

**2] லிட்டில் வுட்டு**

3] பேரா. ஈ.டி. பெல்

4] பேராசிரியர் சூலியன் கக்சுலி

**குறிப்பு :- ஜாகோபி என்பவர் ஜெர்மனி நாட்டில் வாழ்ந்தார். ஜாகோபி 19 ஆம் நூற்றாண்டின் கணிதமேதை. ஆய்லர் சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். ஆய்லர் 18 ஆம் நூற்றாண்டின் இணையற்ற கணிதமேதை ஆவார்.**

**35] கணிதத் திறமையால் விஞ்ஞான உலகினைப் பிரமிக்கச் செய்து வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஓர் இடத்தைப் பெற்ற பிறவிக் கணித மேதை என்று கூறியவர் யார்?**

1] இந்திரா காந்தி

**2] லிட்டில் வுட்டு**

3] பேரா. ஈ.டி. பெல்

4] பேராசிரியர் சூலியன் கக்சுலி

**36] இராமானுஜம் சாதாரண மனிதரல்லர் அவர் இறைவன் தந்த பரிசு என்று கூறியவர் யார்?**

1] இந்திரா காந்தி

2] லிட்டில் வுட்டு

**3] பேரா. ஈ.டி. பெல்**

4] பேராசிரியர் சூலியன் கக்சுலி

**37] இராமானுஜன் முதல்தரமான கணித மேதை என்று கூறியவர் யார்?**

**1] இலண்டன் ஆளுநர் லார்ட்மெண்ட் லண்ட்**

2] லிட்டில் வுட்டு

3] பேரா. ஈ.டி. பெல்

4] பேராசிரியர் சூலியன் கக்சுலி

**38] இராமானுஜம் தான் இந்த 20ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய கணிதமேதை - என்று கூறியவர் யார்?**

1] இந்திரா காந்தி

2] லிட்டில் வுட்டு

3] பேரா. ஈ.டி. பெல்

**4] பேராசிரியர் சூலியன் கக்சுலி**

**39] 1962 டிசம்பர் 22 ஆம் தேதி இராமானுஜத்தின் ---------------- பிறந்த நாள் ஆகும். இராமானுஜத்தின் பிறந்த நாளை முன்னிட்டு நடுவணரசு பதினைந்து காசு அஞ்சல்தலை இருபத்தைந்து இலட்சம் வெளியிட்டது.**

1] 50 வது

2] 55 வது

3] 70 வது

**4] 75 வது**

**40] பேராசிரியர் ராமானுஜம் அனைத்துலக நினைவுக்குழு எங்கு அமைக்கப்பட்டது?**

1] பெங்களூர்

**2] சென்னை**

3] கல்கத்தா

4] மும்பை

**41] பேராசிரியர் ராமானுஜம் அனைத்துலக நினைவுக்குழு சென்னையில் அமைக்கப்பட்ட ஆண்டு?**

1] 1969

2] 1970

**3] 1971**

4] 1972

**42] சென்னையில் ------------------------------ ஆம் ஆண்டு அன்றைய தமிழக முதல்வரால் இராமானுஜம் கணித அறிவியல் நிறுவனம் திறந்து வைக்கப்பட்டது.**

1] 03.10.1969

2] 03.10.1970

3] 03.10.1971

**4] 03.10.1972**

**43] சென்னை துறைமுகம் சார்பில் புதிதாக வாங்கிய குடிநீர்க்கப்பலுக்குச், ------------------- எனப் பெயர் சூட்டப்பட்டது.**

1] அறிஞர் இராமானுஜம்

2] கணிதமேதை இராமானுஜம்

**3] சீனிவாச இராமானுஜம்**

4] இவற்றில் ஏதுமில்லை

**44] அமெரிக்காவின் விசுகன்சீன் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் ரிச்சர்ட்டும் ஆஸ்கேயும் இணைந்து ---------------- ஆம் ஆண்டு இராமானுஜத்தின் மார்பளவு வெண்கலச் சிலையை இந்தியாவிற்குக் கொண்டு வந்து வழங்கினர்.**

1] 1981

2] 1982

3] 1983

**4] 1984**

**45] கணிதக் குறிப்புகள் அடங்கிய 3 குறிப்பேடுகளையும் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் இராமானுஜம் விட்டுச் சென்றுள்ளார். அவருடைய குறிப்பேடுகளில் 3000 முதல் 4000 தேற்றங்களை -------------- ஆம் ஆண்டு 'டாடா' அடிப்படை ஆராய்ச்சி நிலையம், அப்படியே ஒளிப்படம் எடுத்து நூலாக வெளியிட்டுள்ளது.**

1] 1955

2] 1956

**3] 1957**

4] 1958

**46] ராமானுஜம் திண்ணைப் பள்ளியில் படித்த ஊர் எது?**

1] கும்பகோணம்

**2] காஞ்சிபுரம்**

3] திருவையாறு

4] ஈரோடு

**47] ராமானுஜம் தனது ஆசிரியரிடம் -------------------- மதிப்புடையது என வாதிட்டார்?**

1] 1 2] 100 3] 1000 **4] 0**

**48] பழஞ்சோற்றுக் குருநாதனேந்தல் - என்னும் ஊர் , கீழ்க்கண்ட எந்த ஊரின் அருகில் உள்ளது?**

1] ராயபுரம்

2] மன்னார்குடி

3] திருச்சி

**4] சிவகங்கை**

**49] 'உம்' - என்பது கீழ்க்கண்ட எதனுடன் தொடர்புடையது?**

1] வினைச்சொல்

2] பெயர்ச்சொல்

3] உரிச்சொல்

**4] இடைச்சொல்**

**50] 'கொல்' - என்பது கீழ்க்கண்ட எதனுடன் தொடர்புடையது?**

1] வினைச்சொல்

2] பெயர்ச்சொல்

3] உரிச்சொல்

**4] இடைச்சொல்**

**51] மாநகர் என்னும் சொல்லிலுள்ள மா என்பது --------------- ஆகும்.**

1] வினைச்சொல்

2] பெயர்ச்சொல்

3] உரிச்சொல்

**4] இடைச்சொல்**

**52] பலவகைப்பட்ட பண்புகளைக் கொண்டு பெயர்ச்சொற்கள், வினைச்சொற்களை விட்டு நீங்காது செய்யுளுக்கே உரிமை பெற்று வருவன -----------------?**

1] வினைச்சொல்

2] பெயர்ச்சொல்

**3] உரிச்சொல்**

4] இடைச்சொல்

**53] பொருந்தாதது எது?**

1] பெயர்ச்சொல் - வேலன்

2] வினைச்சொல் - வந்தான்

3] இடைச்சொல் - ஐந்தும் ஆறும்

**4] உரிச்சொல் - ஏழும்**

**குறிப்பு :- உரிச்சொல் - மாவீரன்**

**54] தமிழகத்தின் - மாநில விலங்கு எது?**

1] சிறுத்தை

2] புலி

**3] வரையாடு**

4] பசு மாடு

**55] வரையாடு இனங்கள் அதிகமாக உள்ள இடம் எது?**

1] திருச்சி

2] கோவை

**3] உதகை**

4] கொடைக்கானல்

## ஏழாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 4

**1] உண்பொழுது நீராடி உண்டலும் என்பெறினும் பால்பற்றிச் சொல்லா விடுதலும் தோல்வற்றிச் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] புறநானூறு, கண்ணகனார்

2] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

**3] திரிகடுகம், நல்லாதனார்**

4] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

**2] சாயினும் சான்றாண்மை குன்றாமை இம்மூன்றும் தூஉயம் என்பார் தொழில் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] புறநானூறு, கண்ணகனார்

2] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

**3] திரிகடுகம், நல்லாதனார்**

4] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

**3] இல்லார்க்கொன் றீயும் உடைமையும், இவ்வுலகில், நில்லாமை யுள்ளும் நெறிப்பாடும் – எவ்வுயிர்க்கும் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] புறநானூறு, கண்ணகனார்

2] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

**3] திரிகடுகம், நல்லாதனார்**

4] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

**4] துன்புறுவ செய்யாத தூய்மையும் இம்மூன்றும் நன்றறியும் மாந்தர்க் குள - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] புறநானூறு, கண்ணகனார்

2] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

**3] திரிகடுகம், நல்லாதனார்**

4] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

**5] முறைசெய்யான் பெற்ற தலையையும் நெஞ்சில் நிறையிலான் கொண்ட தவமும் – நிறைஒழுக்கம் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] புறநானூறு, கண்ணகனார்

2] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

**3] திரிகடுகம், நல்லாதனார்**

4] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

**6] தேற்றாதான் பெற்ற வனப்பும் இவைமூன்றும் தூற்றின்கண் தூவிய வித்து - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] புறநானூறு, கண்ணகனார்

2] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

**3] திரிகடுகம், நல்லாதனார்**

4] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

**7] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] உண்பொழுது – உண்ணும்பொழுது

2] பெறினும் – பெற்றாலும்

**3] பால்பற்றி – பல பக்கச் சார்பு**

4] தோல்வற்றி – தோல்சுருங்கி

**குறிப்பு :- பால்பற்றி – ஒருபக்கச் சார்பு (நடுவுநிலைமையில் இருந்து மாறுதல்)**

**8] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

**1] சாயினும் – அழியாதிருத்தல்**

2] சான்றாண்மை – அறிவு ஒழுக்கங்களில் நிலைத்து நிற்றல்

3] குன்றாமை – குறையாது இருத்தல்

4] தூஉயம் – தூய்மை உடையோர்

**குறிப்பு :- சாயினும் – அழியினும்**

**9] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] ஈயும் – அளிக்கும்

2] நில்லாமை – நிலையாமை

**3] நெறி – நன்மை**

4] மாந்தர் – மக்கள்

**குறிப்பு :- நெறி – வழி**

**10] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] தேற்றாத்தான் – கடைபிடிக்காதவன்

2] வனப்பு – அழகு

**3] தூறு – சினம்**

4] வித்து – விதை

**குறிப்பு :- தூறு – புதர்**

**11] திரிகடுகம் நூலின் ஆசிரியர் பெயர் என்ன?**

1] கண்ணகனார்

2] விளம்பி நாகனார்

**3] நல்லாதனார்**

4] சீத்தலைச்சாத்தனார்

**12] திரிகடுகம் நூலின் ஆசிரியர் நல்லாதனார் -------------------- மாவட்டத்தைச் சேர்ந்த திருத்து என்னும் ஊரினர் என்பர்.**

1] விருதுநகர்

2] தஞ்சாவூர்

**3] திருநெல்வேலி**

4] திருச்சி

**13] கீழ்க்கண்ட கூற்று யாரைப்பற்றியது?**

**இவரைச், செருஅடுதோள் நல்லாதன் எனப் பாயிரம் குறிப்பிடுவதனால், இவர் போர்வீரராய் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.**

1] கண்ணகனார்

2] விளம்பி நாகனார்

**3] நல்லாதனார்**

4] சீத்தலைச்சாத்தனார்

**14] திரிகடுகம், ---------------------- நூல்களுள் ஒன்று.**

1] எட்டுத்தொகை

2] பத்துப்பாட்டு

**3] பதினெண் கீழ்க்கணக்கு**

4] பதினெண் மேல்க்கணக்கு

**குறிப்பு :- சுக்கு, மிளகு, திப்பிலியால் ஆன மருந்துக்குப் பெயர் திரிகடுகம். இம்மருந்தை உண்ட மனிதர்களுக்கு உடல்நோய் நீங்கும். இதனைப்போன்றே ஒவ்வொரு திரிகடுகப் பாடலிலும் இடம்பெற்றுள்ள மூன்று கருத்தும் மக்களின் மனமயக்கத்தைப் போக்கித் தெளிவை ஏற்படுத்தும்.**

**15] திரிகடுகம் நூல் ------------------ வெண்பாக்களை உடையது.**

1] 50 2] 96 **3] 100** 4] 108

**16] கீழ்க்கண்ட கூற்று எந்த நூலைப் பற்றியது?**

**இந்த நூலில் உள்ள பாடல்களிலுள்ள மூன்று அறக்கருத்தும் கற்போரின் மனத்திலுள்ள அறியாமையாகிய நோயைப் போக்கி, அவரைக் குன்றின்மேலிட்ட விளக்காகச் சமுதாயத்தில் விளங்கச் செய்யும்.**

1] புறநானூறு

2] நான்மணிக்கடிகை

**3] திரிகடுகம்**

4] மணிமேகலை

**17] தான் வழங்கும் நாட்டின்கண் உள்ள பல மொழிகட்கும் தலைமையாக உள்ள தகுதியும், அவற்றிலும் மிக்க மேன்மை உடையதுமான மொழியே உயர்தனிச் செம்மொழி. இவ்விலக்கண அடிப்படையை ஆராயுமிடத்துத் தமிழ்மொழியானது தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலியவற்றிற்கெல்லாம் தலைமையும், அவற்றினும் மிக்க மேன்மையும் உடையதாகையால் உயர்மொழியாய்த் திகழ்கிறது - இந்த கூற்று யாருடையது?**

1] பாவாணர்

**2] பரிதிமாற்கலைஞர்**

3] மறைமலையடிகள்

4] வ.வே.சு

**18] தான் வழங்கும் நாட்டில் பயிலும் மற்றைய மொழிகளின் உதவியின்றித் தனித்து இயங்கவல்ல மொழியே தனிமொழி எனப்படும். திருத்திய பண்பும், சீர்த்த நாகரிகமும், பொருந்திய தூய்மொழி, புகல் செம்மொழியாம் என்பது இலக்கணம் - இந்த கூற்று யாருடையது?**

1] பாவாணர்

**2] பரிதிமாற்கலைஞர்**

3] மறைமலையடிகள்

4] வ.வே.சு

**19] பயிற்றுமொழியைப்பற்றி நிறைவான, தெளிவான ஒரு முடிவுக்கு வருவதுதான், கல்வி கற்பித்தலில் நாம் செய்யவேண்டிய முதல்செயல். பயிற்றுமொழியைக் குறித்துச் சிந்திக்காமல் கல்வி கற்பது, அடித்தளம் இல்லாமல் கட்டடத்தை எழுப்புவதனைப் போன்றது. - இந்த கூற்று யாருடன் தொடர்புடையது?**

1] மு.வரதராசனார்

**2] காந்தியடிகள்**

3] நேரு

4] பாரதிதாசன்

**20] கவி இரவீந்திரநாத் தாகூரின் ஈர்ப்பான இலக்கிய நடையின் உயர்வுக்குக் காரணம், ஆங்கிலத்தில் அவருக்கு இருந்த அறிவு மட்டுமன்று, தம்முடைய தாய்மொழிமீது அவருக்கு இருந்த பற்றுதலும்தான் - என்று கூறியவர் யார்?**

1] மு.வரதராசனார்

**2] காந்தியடிகள்**

3] நேரு

4] பாரதிதாசன்

**21] முன்சிராம் பேசும்போது குழந்தைகள், ஆண்கள், பெண்கள் அனைவரும் மிகுந்த ஈடுபாட்டுடன் கேட்கிறார்கள். இதற்குக் காரணம் அவர்தம் தாய்மொழி அறிவே. உயர்ந்த மனம்படைத்த மதன்மோகன் மாளவியாவின் ஆங்கிலப்பேச்சு வெள்ளியைபோல் ஒளிவிட்டாலும், அவரது தாய்மொழிப் பேச்சு, தங்கத்தைப் போன்று ஒளி வீசுகின்றது - என்று கூறியவர் யார்?**

1] மு.வரதராசனார்

**2] காந்தியடிகள்**

3] நேரு

4] பாரதிதாசன்

**22] ஒரு மொழியைப் பயன்படுத்துகின்றவர்களின் எண்ணங்கள், அம்மொழியில் இடம் பெற்றிருத்தல் வேண்டும். மொழியின் தன்மை, மக்களின் பண்பாட்டைச் சார்ந்திருப்பது இயற்கையே. மக்கள் அறிவுள்ளவர்களாக இருந்தால், அவர்தம் மொழியும் அவ்வாறே அமையும் - என்று கூறியவர் யார்?**

1] மு.வரதராசனார்

**2] காந்தியடிகள்**

3] நேரு

4] பாரதிதாசன்

**23] பள்ளிக்கூடம் வீட்டைப் போன்று இருத்தல் வேண்டும். குழந்தைக்கு வீட்டில் தோன்றும் எண்ணங்களுக்கும் பள்ளியில் ஏற்படும் எண்ணங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருத்தல் வேண்டும். சிறந்த பயன் ஏற்படவேண்டுமாயின், அத்தகைய தொடர்பு இன்றியமையாதது. தெரிந்தறியாத ஒருமொழியின் மூலம் கல்வி கற்பிப்பது, இந்த இணைக்கத்தைக் குலைத்துவிடும். - என்று கூறியவர் யார்?**

1] மு.வரதராசனார்

**2] காந்தியடிகள்**

3] நேரு

4] பாரதிதாசன்

**24] தாய்மொழியைக் கற்பித்தல் மொழியாக வைத்துக்கொண்டால், ஆங்கிலத்தில் அறிவைப் பெறுவது பாதிக்கப்படுமா, இல்லையா என்பதனைப்பற்றிச் சிந்தனை செய்ய வேண்டிய தேவையில்லை என்றே நினைக்கிறேன். படித்த இந்தியர் அனைவரும் அயல் மொழியில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும் என்பதில்லை. - என்று கூறியவர் யார்?**

1] மு.வரதராசனார்

**2] காந்தியடிகள்**

3] நேரு

4] பாரதிதாசன்

**25] ---------------- ஆம் ஆண்டு புரோச் நகரில் நடைபெற்ற இரண்டாவது கல்வி மாநாட்டில் காந்தியடிகள் தலைமை உரை, மாணவர்களுக்கு ஏற்றவண்ணம் கடித வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.**

1] 1914

2] 1915

3] 1916

**4] 1917**

**26] காந்தியடிகள் ---------------- மாநிலத்தில் ஆற்றிய உரையைக் குழந்தைகளுக்குக் கூறினார்.**

1] ஒடிசா

2] தமிழ்நாடு

**3] குஜராத்**

4] பஞ்சாப்

**27] 'உரியது' - என்ற கதைப்பகுதியின் ஆசிரியர் யார்?**

1] சுஜாதா

2] ராஜம் கிருஷ்ணன்

3] ரா.பி.சேதுப்பிள்ளை

**4] திருமுருக. கிருபானந்தவாரியார் (சிந்தனைச் செல்வம்)**

**28] "தொன்மைமிக்க உலக மொழிகள் அனைத்திலும் தமிழே தொன்மை,முன்மை, எளிமை, ஒளிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை என்னும் பல்வகைச் சிறப்புகள் அனைத்தையும் ஒருங்கே பெற்றிருக்கிறது" - என்று கூறியவர் யார்?**

**1] தேவநேயப்பாவாணர்**

2] மறைமலையடிகள்

3] வ.வே.சு

4] திரு.வி.க

**29] மண், நாய், கோழி - என்பன?**

**1] இடுகுறிப்பெயர்கள்**

2] காரணப்பெயர்கள்

3] இடுகுறிப் பொதுப்பெயர்கள்

4] இடுகுறிச் சிறப்புப்பெயர்

**30] நாற்காலி, பறவை, வளையல், செங்கல், முக்காலி, கரும்பலகை - என்பன?**

1] இடுகுறிப்பெயர்கள்

**2] காரணப்பெயர்கள்**

3] இடுகுறிப் பொதுப்பெயர்கள்

4] இடுகுறிச் சிறப்புப்பெயர்

**குறிப்பு :- வளையல், ஊருணி என்பது காரணச் சிறப்புப் பெயர்; பறவை, அணி, அரும்பு - காரணப் பொதுப்பெயர்.**

**31] ஆறு, ஆடு, மரம், மலை, காடு, மாடு - என்பன?**

1] இடுகுறிப்பெயர்கள்

2] காரணப்பெயர்கள்

**3] இடுகுறிப் பொதுப்பெயர்கள்**

4] இடுகுறிச் சிறப்புப்பெயர்

**32] பனை, பலா, அவரை, குயில், தென்னை - என்பது?**

1] இடுகுறிப்பெயர்கள்

2] காரணப்பெயர்கள்

3] இடுகுறிப் பொதுப்பெயர்கள்

**4] இடுகுறிச் சிறப்புப்பெயர்**

**33] "மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும், " - இந்த பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

**2] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்**

3] கம்பராமாயணம், கம்பர்

4] புறநானூறு, ஔவையார்

**34] "மழையின்றேல் மாநிலத்தார்க்கு வளம் இல்லை" என்று மழையின். சிறப்பை பற்றி கூறும் நூல்?**

1] திருக்குறள்

2] புறநானூறு

3] மணிமேகலை

**4] சிலப்பதிகாரம்**

**35] இரவீந்தரநாத தாகூரின் ஈர்ப்பான இலக்கிய நடையின் உயர்வுக்கு காரணம்?**

1] ஆங்கில அறிவு

**2] தாய்மொழி அறிவு**

3] வடமொழி அறிவு

4] இவற்றில் ஏதுமில்லை

**36] தங்கத்தைப் போன்று ஒளி வீசுகின்ற பேச்சு யாருடையது?**

1] முன்சிராம்

2] காந்தியடிகள்

3] நேரு

**4] மதன்மோகன் மாளவியா**

**37] பெரியவரின் தருமக்கணக்கில் செலவழிந்துள்ள பணம் ---------?**

**1] 22000**

2] 2000

3] 23000

4] 2300

**38] பொருந்தாதது எது? வழுக்களை திருத்தி எழுதுக.**

1] அரசர் பலர் வந்தனர்

2] வயலில் மாடுகள் மேய்ந்தது

**3] மயில்கள் ஆடியது**

4] ஔவையார் அத்தியமானிடம் பரிசில் பெறச்சென்றார்

**குறிப்பு :- "மயில்கள் ஆடின".**

**39] தவறானதை தேர்ந்தெடுத்து எழுதுக.**

1] பள்ளிக்கு அருகில் என் வீடு இருக்கிறது

**2] என் வீட்டில் எவருமே இல்லை**

3] எம் ஊர் ஆற்றில் தண்ணீரே இல்லை

4] என் அப்பா அதிகமாய்ச் செலவு செய்கிறார்

**குறிப்பு :- "என் வீட்டில் எவருமே இலர்"**

## ஏழாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 5

**1] என்பணிந்த தென்கமலை ஈசனார் பூங்கோயில் முன்பணிந்த தெய்வ முனிவோர்கள் அன்புஎன்னாம் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

**1] திருவாரூர் நான்மணிமாலை, குமரகுருபரர்**

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

3] பெரிய புராணம், சேக்கிழார்

4] கலிங்கத்துப்பரணி, சயம்கொண்டார்

**2] புண்சுமந்தோம் நந்தி புடைத்தென்னார் புண்ணியனார்; மன்சுமந்தார் என்றுருகு வார் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

**1] திருவாரூர் நான்மணிமாலை, குமரகுருபரர்**

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

3] பெரிய புராணம், சேக்கிழார்

4] கலிங்கத்துப்பரணி, சயம்கொண்டார்

**3] குமரகுருபரர் அவர்களின் பெற்றோர் பெயர்?**

**1] சண்முகசிகாமணிக் கவிராயர் - சிவகாமசுந்தரி அம்மையார்**

2] வெங்கட்ராமன் - அம்மணியம்மாள்

3] வேங்கட மகாலிங்கம் - அஞ்சலையம்மாள்

4] இவர்களில் யாருமில்லை

**4] குமரகுருபரர் அவர்களின் ஊர்?**

1] காசி

2] ராமேஸ்வரம்

3] திருச்செந்தூர்

**4] திருவைகுண்டம்**

**5] நீதிநெறி விளக்கம், முத்துகுமாரசுவாமி பிள்ளைத்தமிழ், கந்தர்கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக்கலம்பகம் - ஆகிய நூல்களின் ஆசிரியர் யார்?**

1] காளமேகப் புலவர்

2] சுத்தானந்த பாரதி

3] திருமுருக கிருபானந்த வாரியார்

**4] குமரகுருபரர்**

**6] குமரகுருபரர் அவர்களின் காலம்?**

1] கி.பி. பதினாறாம் நூற்றாண்டு

**2] கி.பி. பதினேழாம் நூற்றாண்டு**

3] கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு

4] கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு

**7] நான்மணிமாலை என்பது, தமிழில் வழங்கும் ----------------- இல் ஒன்று.**

1] பத்துப்பாட்டு

2] எட்டுத்தொகை

3] காப்பியங்கள்

**4] தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகை**

குறிப்பு :- முத்து, பவளம், மரகதம், மாணிக்கம் என்னும் நால்வகையான மணிகளால் ஆன மாலையைப் போன்று நால்வகையான பாடல்களால் (வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா) ஆன நாற்பது செய்யுளைக் கொண்டது. திருவாரூர் + நான்கு + மணிமாலை = திருவாரூர்நான்மணிமாலை. இது திருவாரூரில் எழுந்தருளியுள்ள தியாகராசர் மீது பாடப்பெற்ற நான்மணிமாலை எனப் பொருள்படும்.

**8] மண் சுமந்தார் எனக் குறிப்பிடப்படுபவர்?**

1] திருமால்

**2] சிவபெருமான்**

3] நான்முகன்

4] இவர்களில் யாருமில்லை

**9] ------------ என்னும் கிழவிக்காக மண்சுமந்து, பாண்டியனிடம் இறைவன் அடிபட்டார்.**

1] நந்தி

**2] வந்தி**

3] கொற்றவை

4] ஐயை

**10] தலைசீவிப் பள்ளிக்கே ஓடு – நல்; தங்கப் பதுமையாம் தோழர்க ளோடு !; விலையில்லா மெய்ப்பொருள் கல்வி ! – அதை; விரும்பிப் படித்தால் அறிவுண்டாம் செல்வி ! - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

**3] வாணிதாசன்**

4] நாமக்கல் கவிஞர்

**11] அழுக்கில்லா ஆடையே மேன்மை ! அதை; அணிவதா லல்லவோ உடற்குண்டாம் தூய்மை; ஒழுங்கோடு நூல்களைத் தூக்கி – நில்லாது; ஓடடி ஓடடி பள்ளியை நோக்கி ! - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

**3] வாணிதாசன்**

4] நாமக்கல் கவிஞர்

**12] சின்னஞ் சிறுகுயில் போல – இசை; சிந்திச் சிரித்துச் செவ்விதழ் காட்டு; பொன்னொத்த தோழர் களோடு – பள்ளி; போகும் வழியிலும் ஒற்றுமை காட்டு ! - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

**3] வாணிதாசன்**

4] நாமக்கல் கவிஞர்

**13] கற்பிப்போர் கண்கொடுப் போரே – அந்தக்; கணக்காயர் உரையினில் இருசெவி சேரே !; நற்பெயர் எடுத்திட வேண்டும் ! – நாளும்; நன்றாகப் படித்துநீ முன்னேற வேண்டும் ! - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

**3] வாணிதாசன்**

4] நாமக்கல் கவிஞர்

**14] தென்கமலை - என்பதன் பொருள்?**

1] தெற்கில் உள்ள திருச்செந்தூர்

**2] தெற்கில் உள்ள திருவாரூர்**

3] தெற்கில் உள்ள திருவண்ணாமலை

4] தெற்கில் உள்ள திருப்பரங்குன்றம்

15] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.

1] பதுமை – உருவம்

2] மெய்பொருள் – நிலையான பொருள்

3] கணக்காயர் – ஆசிரியர்

**4] நவ்வி - சிங்கம்**

**குறிப்பு :- நவ்வி - மான்**

**16] வாணிதாசன் அவர்களின் இயற்பெயர்?**

**1] எத்திராசலு (எ) அரங்கசாமி**

2] ராஜேந்திரன்

3] காமராசன்

4] கோமல் சுவாமிநாதன்

**17] வாணிதாசன் அவர்கள் பிறந்த இடம்?**

**1] புதுவையை அடுத்த வில்லியனூர்**

2] மன்னார்குடியை அடுத்த நீடாமங்கலம்

3] விருதுநகர் அடுத்த திருச்சுழி

4] தூத்துக்குடியை அடுத்த கோவில்பட்டி

**18] வாணிதாசன் அவர்கள் பெற்றோர் பெயர்?**

1] சாத்தப்பன் - விசாலாட்சி

2] வெங்கட்ராமன் - அம்மணியம்மாள்

3] முத்தையா - ராஜம்மாள்

**4] அரங்க.திருக்காமு - துளசியம்மாள்**

**19] கவிஞரேறு, பாவலர்மணி என்னும் பட்டங்கள் பெற்றுள்ளவர் யார்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

**3] வாணிதாசன்**

4] அப்துல் ரகுமான்

**20] தமிழகத்தின் 'வேர்ட்ஸ் வொர்த்' என அழைக்கப்படுபவர் யார்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

**3] வாணிதாசன்**

4] அப்துல் ரகுமான்

**குறிப்பு:- உருசியம், ஆங்கிலம் முதலிய மொழிகளில் இவர்தம் பாடல்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. கவிஞர் வாணிதாசன் தமிழ் உலகிற்குப் புனைந்து அளித்துள்ள 'குழந்தை இலக்கியம்' என்னும் பாடல் தொகுப்பிலிருந்து**

**'மெய்ப்பொருள் கல்வி' என்னும் தலைப்பின் கீழ் இடம்பெற்றுள்ள பாடல், பாடப்பகுதியாக அமைந்துள்ளது.**

**21] வாணிதாசன் அவர்களின் காலம்?**

**1] 22.07.1915 முதல் 07.08.1974 வரை**

2] 22.07.1925 முதல் 07.08.1964 வரை

3] 22.07.1935 முதல் 07.08.1984 வரை

4] 22.07.1945 முதல் 07.08.1994 வரை

**22] கோவில் மாநகர், தென்னிந்தியாவின் ஏதென்ஸ் - என்று புகழப்படும் ஊர் எது?**

1] திருச்சி

2] சென்னை

**3] மதுரை**

4] கோவை

**23] மதுரை என்னும் சொல்லுக்கு ---------- என்பது பொருள்.**

1] புதுமை

2] பழமை

**3] இனிமை**

4] நன்மை

**24] மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப் பூவோடு புரையுஞ் சீரூர் பூவில் - என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் எது?**

1] கலித்தொகை

2] புறநானூறு

**3] பரிபாடல்**

4] நற்றிணை

**25] இதழகத் தனைய தெருவம் இதழகத்து அரும்பொகுட் டனைத்தே அண்ணல் கோயில் - என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் எது?**

1] கலித்தொகை

2] புறநானூறு

**3] பரிபாடல்**

4] நற்றிணை

**26] "தமிழ்கெழு கூடல்" - என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் எது?**

1] கலித்தொகை

**2] புறநானூறு**

3] பரிபாடல்

4] நற்றிணை

**27] "தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரை" - என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

**1] சிறுபாணாற்றுப்படை, நல்லூர் நத்தத்தனார்**

2] புறநானூறு, கண்ணகனார்

3] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

4] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

**28] ஓங்குசீர் மதுரை, மதுரை மூதூர் மாநகர், தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரை - என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிறுபாணாற்றுப்படை, நல்லூர் நத்தத்தனார்

2] புறநானூறு, கண்ணகனார்

**3] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்**

4] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

**29] மாண்புடை மரபின் மதுரை, வானவர் உறையும் மதுரை, பதியெழுவறியாப் பண்பு மேம்பட்ட மதுரை மூதூர் - என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிறுபாணாற்றுப்படை, நல்லூர் நத்தத்தனார்

2] புறநானூறு, கண்ணகனார்

**3] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்**

4] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

**30] பொருந்தாதது எது?**

1] சேரநாடு - வேழமுடைத்து

2] சோழநாடு - சோறுடைத்து

**3] பாண்டியநாடு - போருடைத்து**

4] தொண்டைநாடு - சான்றோர் உடைத்து

**குறிப்பு :- பாண்டியநாடு – முத்துடைத்து**

**31] -------------------- என்னும் ஊருக்கு கூடல் எனவும், ஆலவாய் எனவும் வேறு பெயர்கள் வழங்குகின்றன.**

1] கோவை

**2] மதுரை**

3] திருச்சி

4] சென்னை

**குறிப்பு :- நான்மாடக்கூடல் என்னும் பெயரே கூடல் என் மருவியுள்ளது. திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர் ஆகிய நான்கு திருக்கோவில்கள் சேர்ந்தமைந்ததனால், நான்மாடக்கூடல் என்னும் பெயர் வழங்கலாயிற்று என்பர். கன்னிக்கோவில், கரியமால் கோவில், காளிகோவில், ஆலவாய்க் கோவில் ஆகிய நான்கு திருக்கோவில்களும் மதுரைக்கு காவலாக அமைந்ததனால், நான்மாடக்கூடல் என்னும் பெயரமைந்தது என்பாரும் உளர்.**

**32] வருணன், மதுரையை அழிக்க ஏழு மேகங்களை அனுப்பினான். அதைப் பற்றி இறைவனிடம் பாண்டியன் முறையிட, இறைவன் நான்கு மேகங்களை மதுரையைக் காக்க அனுப்பினார். அந்நான்கும் நான்கு மாடங்களாக கூடி மதுரையைக் காத்தமையால் "நான்மாடக்கூடல்" என்னும் பெயர் ஏற்பட்டதாக கூறியவர் யார்?**

1] கிருபானந்த வாரியார்

**2] பரஞ்சோதியார்**

3] மறைமலையடிகள்

4] சேக்கிழார்

**33] மதுரைக்கு ஆலவாய் என்னும் பெயர் அமைந்ததாக கூறியவர் யார்?**

1] கிருபானந்த வாரியார்

**2] பரஞ்சோதியார்**

3] மறைமலையடிகள்

4] சேக்கிழார்

**34] மருத மரங்கள் அடர்ந்த பகுதியாக இருந்தமையால் "மருதை" என வழங்கிய இடம், காலப்போக்கில் மதுரை என்றாகியதாம். கல்வெட்டில் "--------------" என்ற பெயர் காணப்படுகிறது.**

1] மதுர

2] மதுரா

3] மந்த்ரா

**4] மதிரை**

**35] அரிமர்த்தன பாண்டியனுக்கு அமைச்சராக விளங்கியவர்?**

1] சேக்கிழார்

**2] மாணிக்கவாசகர்**

3] தாயுமானவர்

4] இவர்களில் யாருமில்லை

**36] சிலப்பதிகாரக் காப்பியத் தலைவன் கோவலன் கொலைக்களப்பட்ட இடம் "-----------------" என்னும் பெயருடன் இன்றும் அப்பகுதி மக்களிடம் வழங்கப்படுகிறது.**

**1] கோவலன் பொட்டல்**

2] கோவிலூர்

3] கொலையூர்

4] இவற்றில் ஏதுமில்லை

**37] ----------- ஆம் நூற்றாண்டில் எழுந்த சிலப்பதிகாரமே, மதுரை மூதூர் எனக் குறிப்பிடுவதனால் மதுரையின் பழைமை பெறப்படும்.**

**1] கி.பி. இரண்டாம் நூற்றண்டு**

2] கி.பி. மூன்று நூற்றண்டு

3] கி.பி. நான்கு நூற்றண்டு

4] கி.பி. ஐந்து நூற்றண்டு

**38] மீனாட்சியம்மன் கோவிலின் நான்கு கோபுரங்களுள் பழமையானது -------------- கோபுரம்; உயரமானது தெற்குக் கோபுரம். இது 1600.9 அடி உயரமும் 1511 கதை உருவங்களும் உடையது.**

**1] கிழக்கு**

2] மேற்கு

3] வடக்கு

4] தெற்கு

**39] மரம் பயன்படுத்தாமல் கட்டப்பட்டது நாயக்கர் மகால். இதன் ஒவ்வொரு தூணும் ------------- அடி உயரமும் 19 அடி சுற்றளவும் கொண்டது.**

1] 60

2] 70

**3] 82**

4] 90

**40] நான்காம் தமிழ்ச்சங்கத்தை தோற்றுவித்தவர்?**

1] மருது பாண்டியர்

**2] பாண்டித்துரையார்**

3] முத்துராமலிங்கனார்

4] இவர்களில் யாருமில்லை

**41] கண்ணதாசன் அவர்கள் சிறுகூடல்பட்டியில் -------------- ஆம் ஆண்டு பிறந்தார்.**

1] 1901

2] 1917

**3] 1927**

4] 1937

**42] கண்ணதாசன் அவர்களின் இயற்பெயர்?**

1] சோமசுந்தரம்

2] ராமலிங்கம்

**3] முத்தையா**

4] ராஜேந்திரன்

**43] ---------------- என்பவருக்கு, காரைமுத்துப் புலவர், வணங்காமுடி, பார்வதிநாதன், ஆரோக்கியநாதன், கமகப்பிரியா எனப் புனைப்பெயர்கள் பல உண்டு.**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

**4] கண்ணதாசன்**

**44] கீழ்க்கண்டவர்களுள், தமிழக அரசின் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தவர் யார்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

**4] கண்ணதாசன்**

**45] கண்ணதாசன் அவர்கள் -------------- ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.**

1] 1971

**2] 1981**

3] 1975

4] 1985

**46] இந்தியாவுக்கு விடுதலை கிடைத்தால், நாட்டைத் திறமையாக ஆட்சிபுரியும் தகுதி இந்தியருக்கு இருக்கிறதா? என்பது ஐயமே" - என்று இந்தியர்களை குறைத்து மதிப்பிட்டவர்?**

1] நெப்போலியன்

**2] ஹிட்லர்**

3] முகமது கஜினி

4] நெல்சன் மண்டேலா

**47] உலகையே நடுங்கச்செய்த கொடுங்கோலரான ஹிட்லரை, மன்னிப்பு கேட்க செய்த மாவீரன் யார்?**

1] வீரபாண்டிய கட்டபொம்மன்

2] மருது பாண்டியர்

**3] செண்பகராமன்**

4] புலித்தேவன்

**48] "இளைஞர்கள் பிறரிடமிருந்து நல்லவற்றை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். அப்போதுதான் வளரமுடியும். நீங்கள் கடவுளின் குழந்தைகள். சிங்கங்களே! எழுந்து வாருங்கள். நீங்கள் செம்மறி ஆடுகள் என்ற மயக்கத்தை உதறித்தள்ளுங்கள்" என்று --------------- என்பவர் இளைஞர்களை நோக்கி வீரமுழக்கமிட்டார்.**

1] பாரதியார்

2] தாயுமானவர்

**3] விவேகானந்தர்**

4] காந்தியடிகள்

## ஏழாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 6

**1] ஏர்முனைக்கு நேரிங்கே எதுவுமே இல்லே ! என்றும்நம்ம வாழ்விலே பஞ்சமே இல்லே ! – (ஏர்முனை ) - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] கண்ணதாசன்

2] வாலி

3] பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம்

**4] அ.மருதகாசி**

**2] பூமியிலே மாரியெல்லாம் சூரியனாலே – பயிர்; பூப்பதுவும் காய்ப்பதுவும் மாரி யினாலே – நாம்; - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] கண்ணதாசன்

2] வாலி

3] பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம்

**4] அ.மருதகாசி**

**3] சேமமுற நாள்முழுதும் உழைப்பத னாலே – இந்தத் தேசமெல்லாம் செழித்திடுது நம்ம கையாலே ! (ஏர்முனை) - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] கண்ணதாசன்

2] வாலி

3] பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம்

**4] அ.மருதகாசி**

**4] நெத்தி வேர்வை சிந்தினோமே முத்துமுத்தாக – அது நெல்மணியாய் விளைஞ்சிருக்குக் கொத்துக்கொத்தாக - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] கண்ணதாசன்

2] வாலி

3] பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம்

**4] அ.மருதகாசி**

**5] பக்குவமாய் அறுத்துஅதைக் கட்டுகட்டாக – அடிச்சுப் பதருநீக்கிக் குவிச்சு வைப்போம் முட்டுமுட்டாக ! (ஏர்முனை) - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] கண்ணதாசன்

2] வாலி

3] பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம்

**4] அ.மருதகாசி**

**6] வளர்ந்துவிட்ட பருவப்பெண் போல்உனக்கு வெட்கமா ? – தலை வளைஞ்சு சும்மா பாக்கிறியே தரையின்பக்கமா – இது - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] கண்ணதாசன்

2] வாலி

3] பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம்

**4] அ.மருதகாசி**

**7] வளர்த்துவிட்ட தாய்க்குத் தரும்ஆசை முத்தமா? – என் மனைக்கு வரக்காத்திருக்கும் நீஎன் சொத்தம்மா – (ஏர்முனை) - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] கண்ணதாசன்

2] வாலி

3] பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம்

**4] அ.மருதகாசி**

**8] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] மாரி – மழை

**2] சேமம் – விதை**

3] தேசம் – நாடு

4] முட்டு -குவியல்

**குறிப்பு :- சேமம் – நலம்**

**9] திரைக்கவித் திலகம் அ. மருகதாசி அவர்கள் பிறந்த ஊர்?**

1] தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கோவில்பட்டி

2] விருதுநகர் மாவட்டத்திலுள்ள சாத்தூர்

3] திருவாரூர் மாவட்டத்திலுள்ள மன்னார்குடி

**4] திருச்சி மாவட்டத்திலுள்ள மேலக்குடிகாடு**

**10] கீழ்க்கண்டவர்களுள் திரைக்கவித் திலகம் என அழைக்கப்படுபவர் யார்?**

1] கண்ணதாசன்

2] வாலி

3] பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம்

**4] அ.மருதகாசி**

**குறிப்பு :- "திரைக்கவித் திலகம் அ. மருதகாசி பாடல்கள்" என்னும் தலைப்பில் திரைக்கதைகளுக்கு எழுதிய பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. "சமூகம்" என்னும் தலைப்பின்கீழ் இடம்பெற்றுள்ள பாடல், பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.**

**11] திரைக்கவித் திலகம் அ. மருதகாசி அவர்கள் பெற்றோர் பெயர்?**

1] வெங்கட்ராமன் - அம்மணியம்மாள்

2] சாத்தப்பன் - விசாலாட்சி

3] முத்தையா - கோமளவள்ளி

**4] அய்யம்பெருமாள் – மிளகாயி அம்மாள்**

**12] திரைக்கவித் திலகம் அ. மருதகாசி அவர்களின் காலம்?**

**1] 13.02.1920 முதல் 29.11.1989 வரை**

2] 13.02.1730 முதல் 29.11.1799 வரை

3] 13.02.1940 முதல் 29.11.1979 வரை

4] 13.02.1950 முதல் 29.11.1999 வரை

**13] வீரன்நெடு வெள்வேல் வியன்செந்தில் எம்பெருமான் பாரில்உயி ரெல்லாம் படைத்தனன்காண் அம்மானை, - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] மறைமலையடிகள்

2] தாயுமானவர்

3] திரு.வி.க

**4] ஈசான தேசிகர் என்னும் சுவாமிநாத தேசிகர்**

**14] பாரில்உயி ரெல்லாம் படைத்தனனே யாமாகில் ஆரணங்கள் நான்கும் அறிவனோ அம்மானை, அறிந்து சிறைஅயனுக் காக்கினன்காண் அம்மானை - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] மறைமலையடிகள்

2] தாயுமானவர்

3] திரு.வி.க

**4] ஈசான தேசிகர் என்னும் சுவாமிநாத தேசிகர்**

**15] வீரன்நெடு வெள்வேல் வியன்செந்தில் எம்பெருமான் பாரில்உயி ரெல்லாம் படைத்தனன்காண் அம்மானை, - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல்?**

1] மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

**2] திருச்செந்திற் கலம்பகம்**

3] கலிங்கத்துப்பரணி

4] திருவாரூர் நான்மணிமாலை

**16] பாரில்உயி ரெல்லாம் படைத்தனனே யாமாகில் ஆரணங்கள் நான்கும் அறிவனோ அம்மானை, அறிந்து சிறைஅயனுக் காக்கினன்காண் அம்மானை - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல்?**

1] மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

**2] திருச்செந்திற் கலம்பகம்**

3] கலிங்கத்துப்பரணி

4] திருவாரூர் நான்மணிமாலை

**17] ------------------- என்பது, ஒருவகைக் காய் விளையாட்டு. இதுபெண்கள் விளையாடுதற்குரியது. பெண்கள் மூவர் வட்டமாக உட்கார்ந்துக்கொண்டு கல்லை மேலெறிந்து பிடித்தாடுவது அம்மானை விளையாட்டு. அங்கனம் ஆடுங்கால் முதலாமவர் இரண்டாமவரிடம் ஒரு கருத்தைக்கூறித் தொடங்க, இரண்டாமவர் மூன்றாமவரை அதுபற்றி வினவ, மூன்றாமவர் அதற்கு விடைகூறி முடிப்பதாக அமையும் சுவையான ஓர் உரையாடல் விளையாட்டு.**

1] கண்ணாமூச்சி

2] தாயம்

**3] அம்மானை**

4] பல்லாங்குழி

**குறிப்பு :- அம்மானை - இவ்விளையாட்டைத் தமிழக மகளிர் பண்டுதொட்டே ஆடி வருகின்றனர். நான்முகன் மறைகளைப் படைத்தவனாகவும், மறையை அறிந்தவனாகவும் இருந்தும் பிரணவப் பொருளைப் பற்றித் தெரியாததனால், முருகப்பெருமான் நான்முகனைச் சிறையில் அடைத்த செய்தியை வரலாறு கூறுகிறது. முருகப்பெருமான் சிறந்தவன், யாவும் அறிந்தவன் என்பது இப்பாடலில் உணர்த்தப் பெறுகிறது.**

**18] திருச்செந்திற் கலம்பகம் நூலின் ஆசிரியர் பெயர் என்ன?**

1] மறைமலையடிகள்

2] தாயுமானவர்

3] திரு.வி.க

**4] ஈசான தேசிகர் என்னும் சுவாமிநாத தேசிகர்**

**குறிப்பு :- ஈசான தேசிகர் என்பது அவருடைய சிறப்புப் பெயராகும்.**

**19] ஈசான தேசிகர் என்னும் சுவாமிநாத தேசிகர் அவர்களின் தந்தை பெயர்?**

1] கந்தசாமி

**2] தாண்டவமூர்த்தி**

3] சுந்தரமூர்த்தி

4] மயிலேறும் பெருமாள்

**20] ஈசான தேசிகர் என்னும் சுவாமிநாத தேசிகர் ---------------- என்பாரிடம் கல்வி கற்றார்.**

1] வேங்கட மகாலிங்கம்

2] தாண்டவமூர்த்தி

3] சுந்தரமூர்த்தி

**4] மயிலேறும் பெருமாள்**

**21] கீழ்க்கண்டவர்களுள், திருவாடுதுறை ஞானதேசிகராகிய அம்பலவாண தேசிகமூர்த்திக்குத் தொண்டராய் இருந்தவர் யார்?**

1] மறைமலையடிகள்

2] தாயுமானவர்

3] திரு.வி.க

**4] ஈசான தேசிகர் என்னும் சுவாமிநாத தேசிகர்**

**22] ஈசான தேசிகர் என்னும் சுவாமிநாத தேசிகர் அவர்கள் ஏறத்தாழ --------------- ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்.**

1] 15

**2] 150**

3] 1500

4] 2000

**23] திருச்செந்திற்கலம்பகம் என்னும் இந்நூல் --------------------------- இல் ஒன்று.**

1] ஐம்பெரும் காப்பியங்கள்

2] எட்டுத்தொகை

3] பத்துப்பாட்டு

**4] தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகை**

**குறிப்பு :- திருச்செந்திற்கலம்பகம் என்னும் இந்நூல் தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. கலம்பகம் – கலம் + பகம் எனப் பிரியும். கலம் – பன்னிரண்டு. பகம் – ஆறு எனப் பதினெண் உறுப்புகளைக் கொண்டது. மேலும், பல்வகையான பா வகைகளும் கலந்திருத்தலால் இந்நூல் கலம்பகம் எனவும்பெயர் பெற்றது. பதினெண் உறுப்புகளில் ஒன்றாகிய அம்மானை என்னும் பகுதி, ஈண்டுப் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது.**

**24] அம்மானைப் பாடலில் போற்றப்படும் தெய்வம்?**

**1] முருகன்**

2] நான்முகன்

3] சிவன்

4] விஷ்ணு

**25] முருகனால் சிறையிலிடப்பட்டவன்?**

1] முருகன்

**2] நான்முகன்**

3] சிவன்

4] விஷ்ணு

**26] ஒருமுறை திரு.வி.க அவரிடம் பூக்களில் சிறந்த பூ எதுவெனக் கேட்டனர். அதற்குத் திரு.வி.க சற்றும் தயங்காமல் -------------------- எனக் கூறினார்.**

1] வேப்பம் பூ

**2] பருத்திப் பூ**

3] மல்லிகைப் பூ

4] தாமரைப் பூ

**27] பொருந்தாதது எது?**

1] திருப்பூர் - பின்னலாடைகள்

2] மதுரை - சுங்குடிப்புடவைகள்

3] உறையூர் - கண்டாங்கிச்சேலைகள்

**4] சென்னிமலை - பட்டாடைகள்**

**குறிப்பு :- காஞ்சிபுரம் - பட்டாடைகள்; சென்னிமலை - போர்வைகள்.**

**28] உலகிலேயே கைத்தறி நெசவின் முன்னோடி ?**

1] ஆந்திரா

2] கேரளா

3] மேற்கு வங்கம்

**4] தமிழ்நாடு**

**29] நிலைத்த செல்வம் கல்விச் செல்வம் - என்ற சிறுகதையின் ஆசிரியர் யார்?**

1] ராஜம் கிருஷ்ணன்

2] சுஜாதா

**3] பி.எம்.முத்து**

4] சி.சு.செல்லப்பா

**30] ஒரு பெயரைக்கொண்டு முடியும் முற்றுப்பெறாத, வினைச்சொல்லே -------------------- ஆகும்.**

1] வினையெச்சம்

2] வினைமுற்று

**3] பெயரெச்சம்**

4] வினைத்தொகை

**குறிப்பு :- பெயரெச்சம் முக்காலத்திலும் வரும். (எ.கா) : பழுத்த பழம்.**

**31] வினையைக் (வினைமுற்றை) கொண்டு முடியும் எச்சம் ---------------- எனப்படும்.**

**1] வினையெச்சம்**

2] வினைமுற்று

3] பெயரெச்சம்

4] வினைத்தொகை

**குறிப்பு :- வினையெச்சசம் முக்காலத்தையும் உணர்த்தும். (எ.கா) : எடுத்து வந்தான்.**

**32] செயல் முடிந்ததனைக் குறிக்கும் சொல்லே ------------------ ஆகும்.**

1] வினையெச்சம்

**2] வினைமுற்று**

3] பெயரெச்சம்

4] வினைத்தொகை

**குறிப்பு :- வினைமுற்று, இது, மூன்று காலங்களில் ஒன்றனை உணர்த்தும், திணை, பால், எண், இடம், ஆகியவற்றைக் காட்டும். (எ.கா) : பழுத்த பழம் எடுத்து வந்தான். "வந்தான்" என்பது "செயல்" முற்றுப்பெற்றதனை உணர்த்துவதனால், இது வினைமுற்று ஆகும். பழுத்த என்னும் சொல், முற்றுப்பெறாத வினைச்சொல்.**

**33] நம் முன்னோர் எப்பொருளை எச்சொல்லால் குறித்து வழங்கினார்களோ அப்பொருளை அச்சொல்லால் குறிப்பதே --------- எனப்படும். மரபுச் சொற்களைப் பயன்படுத்தாமல் வேறு சொற்களைப் பயன்படுத்துவது மரபுப்பிழை.**

1] வழு

2] வழுவமைதி

**3] மரபு**

4] இவற்றில் ஏதுமில்லை

**34] பொருந்தாதது எது? காய்களின் இளமை மரபு.**

1] அவரைப் பிஞ்சு, கத்தரிப்பிஞ்சு

2] வாழைக்கச்சல், வெள்ளரிப்பிஞ்சு

3] தென்னங்குரும்பை

**4] மாங்காய்**

**குறிப்பு :- விடை - மாவடு**

**35] பொருந்தாதது எது? விலங்குகள்: இளமை மரபு.**

1] அணிற்பிள்ளை

2] குருவிக்குஞ்சு

3] பசுங்கன்று

**4] யானைக்குட்டி**

**குறிப்பு :- யானைக்கன்று**

**36] பொருந்தாதது எது? விலங்குகள்: இளமை மரபு.**

1] கழுதைக்குட்டி

2] குரங்குக்குட்டி

3] ஆட்டுக்குட்டி

**4] சிங்கக்குட்டி**

**குறிப்பு :- சிங்கக்குருளை**

**37] பொருந்தாதது எது? விலங்குகள்: இளமை மரபு.**

1] பன்றிக்குட்டி

2] கீரிப்பிள்ளை

**3] புலிக்குட்டி**

4] எலிக்குட்டி

**குறிப்பு :- சரியானது:- புலிப்பறழ்**

**38] பொருந்தாதது எது? விலங்குகள்: இளமை மரபு.**

1] கோழிக்குஞ்சு

**2] மான்குட்டி**

3] எருமைக்கன்று

4] குதிரைக்குட்டி

**குறிப்பு :- சரியானது :- மான்கன்று**

**39] பொருந்தாதது எது? ஒலி மரபுச்சொற்கள்.**

1] ஆந்தை அலறும்

**2] குயில் அகவும்**

3] கிளி கொஞ்சும்/ பேசும்

4] வாத்து கத்தும்

**குறிப்பு :- சரியானது :- குயில் கூவும்**

**40] பொருந்தாதது எது? ஒலி மரபுச்சொற்கள்.**

1] மயில் அகவும்

**2] வண்டு கத்தும்**

3] சேவல் கூவும்

4] கோழி கொக்கரிக்கும்

**குறிப்பு :- சரியானது :- வண்டு முரலும்**

**41] பொருந்தாதது எது? ஒலி மரபுச்சொற்கள்.**

1] காகம் கரையும்

2] கோட்டான் குழறும்

3] குருவி கீச்சிடும்

**4] கூகை கத்தும்**

**குறிப்பு :- சரியானது :- கூகை குழறும்**

**42] பொருந்தாதது எது? ஒலி மரபுச்சொற்கள்.**

**1] புறா அலப்பும்**

2] வானம்பாடி பாடும்

3] கோட்டான் குழறும்

4] வண்டு முரலும்

**குறிப்பு :- சரியானது :- புறா குனுகும்**

**43] பொருந்தாதது எது? ஒலி மரபுச்சொற்கள்.**

1] சிங்கம் முழங்கும்

2] நரி ஊளையிடும்

3] குதிரை கனைக்கும்

**4] யானை உறுமும்**

**குறிப்பு :- சரியானது :- யானை பிளிறும்**

**44] பொருந்தாதது எது? வினை மரபுச் சொற்கள்**

1] அப்பம் தின்

2] காய்கறி அரி

**3] இலை பிடுங்கு**

4] நெல் தூற்று

**குறிப்பு :- சரியானது :- இலை பறி**

**45] பொருந்தாதது எது? வினை மரபுச் சொற்கள்**

1] களை பறி

2] நீர் பாய்ச்சு

3] பாட்டுப் பாடு

**4] மலர் பிடுங்கு**

**குறிப்பு :- சரியானது :- மலர் கொய்**

## ஏழாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 7

**1] நீ தந்த கனி இது; நீ தந்த கரும்பிது; நீ தந்த நெற்கதிர் இது; நீ தந்த நீர் இது; நீ தந்த சீர் இது நீ தந்த ஒளியும் இஃதே - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] வல்லிக்கண்ணன்

2] மீ.ராசேந்திரன்

3] காமராசன்

**4] ந.பிச்சமூர்த்தி**

**குறிப்பு :- இந்த பாடல் வரிகள், ந. பிச்சமூர்த்தி கவிதைகள் என்னும் நூலில் இடம்பெற்றுள்ள எண்பத்துமூன்று கவிதைகளில் ஒன்று இப்பொங்கல் வழிபாடு என்னும் கவிதை.**

**2] நீ தந்த சீரும் நீ தந்த திருவும் நினக்கே நிவேதனம் கதிரவா ! கனகப் புரவிமேல் கடுகியே வந்திடு கதிரவா எங்கள் கோவே ! - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] வல்லிக்கண்ணன்

2] மீ.ராசேந்திரன்

3] காமராசன்

**4] ந.பிச்சமூர்த்தி**

**குறிப்பு :- இந்த பாடல் வரிகள், ந. பிச்சமூர்த்தி கவிதைகள் என்னும் நூலில் இடம்பெற்றுள்ள எண்பத்துமூன்று கவிதைகளில் ஒன்று இப்பொங்கல் வழிபாடு என்னும் கவிதை.**

**3] நீ தந்த செல்வத்தை நிவேதனம் செய்பிழை யாம் அறிந்தும் வழிவேறு வணங்க யாம் அறியாது கூவுகின்றோம். கதிரவா கடுகி வருவாய் ! - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] வல்லிக்கண்ணன்

2] மீ.ராசேந்திரன்

3] காமராசன்

**4] ந.பிச்சமூர்த்தி**

**குறிப்பு :- இந்த பாடல் வரிகள், ந. பிச்சமூர்த்தி கவிதைகள் என்னும் நூலில் இடம்பெற்றுள்ள எண்பத்துமூன்று கவிதைகளில் ஒன்று இப்பொங்கல் வழிபாடு என்னும் கவிதை.**

**4] நீயன்றி மண்ணுண்டோ, விண்ணுண்டோ, ஒளியுண்டோ, நிலவுமுண்டோ, நீருண்டோ, என்னிடம் வாழ்த்துப் பொருளுமுண்டோ ? கதிரவா கனிந்து வருவாய் ! - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] வல்லிக்கண்ணன்

2] மீ.ராசேந்திரன்

3] காமராசன்

**4] ந.பிச்சமூர்த்தி**

**குறிப்பு :- இந்த பாடல் வரிகள், ந. பிச்சமூர்த்தி கவிதைகள் என்னும் நூலில் இடம்பெற்றுள்ள எண்பத்துமூன்று கவிதைகளில் ஒன்று இப்பொங்கல் வழிபாடு என்னும் கவிதை.**

**5] கரும்பு மனமும் இனிப்பாம் உயிரும் நின்னடி படைத்து விட்டோம் கதிரவா ! ஏற்று மகிழ்வாய் உயர்ந்தவா, உயிரின் முதலே ! - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] வல்லிக்கண்ணன்

2] மீ.ராசேந்திரன்

3] காமராசன்

**4] ந.பிச்சமூர்த்தி**

**குறிப்பு :- இந்த பாடல் வரிகள், ந. பிச்சமூர்த்தி கவிதைகள் என்னும் நூலில் இடம்பெற்றுள்ள எண்பத்துமூன்று கவிதைகளில் ஒன்று இப்பொங்கல் வழிபாடு என்னும் கவிதை.**

**6] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] திரு – செல்வம்

2] நிவேதனம் – படையலமுது

3] கனகம் – பொன்

**4] புரவி – புலி**

**குறிப்பு :- புரவி – குதிரை**

**7] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] கோ – அரசன்

2] கடுகி – விரைந்து

3] நவ்வி - மான்

**4] கேழல் - கரடி**

**குறிப்பு :- கேழல் - பன்றி**

**8] ந. பிச்சமூர்த்தி அவர்களின் இயற்பெயர் என்ன?**

1] சுந்தர மகாலிங்கம்

2] பிச்சை மகாலிங்கம்

**3] வேங்கட மகாலிங்கம்**

4] சந்தன மகாலிங்கம்

**குறிப்பு :- ந. பிச்சமூர்த்தி என்பது புனைபெயர்.**

**9] ந. பிச்சமூர்த்தி என்ற வேங்கட மகாலிங்கம் அவர்களின் ஊர்?**

**1] தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கும்பகோணம்**

2] விருதுநகர் மாவட்டத்திலுள்ள சாத்தூர்

3] திருவாரூர் மாவட்டத்திலுள்ள மன்னார்குடி

4] தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கோவில்பட்டி

**10] இந்த கூற்று யாருடன் தொடர்புடையது?**

**1924 – 1938 வரை வழக்குரைஞர்; 1938 – 1954 வரை கோவில் நிருவாக அலுவலர். இவரின் எழுத்துப்பணி : கதைகள், மரபுக்கவிதைகள், புதுக்கவிதைகள், ஓரங்க நாடகங்கள்.**

1] கண்ணதாசன்

2] பாரதிதாசன்

3] பட்டுக்கோட்டை கலியாணசுந்தரனார்

**4] ந.பிச்சமூர்த்தி**

**11] ந. பிச்சமூர்த்தி என்ற வேங்கட மகாலிங்கம் அவர்களின் காலம்?**

1] 15.08.1880 – 04.12 1946

2] 15.08.1890 – 04.12 1956

3] 15.08.1900 – 04.12 1966

**4] 15.08.1900 – 04.12 1976**

**12] இந்த கூற்று யாருடன் தொடர்புடையது?**

**இருபதாம் நூற்றாண்டின் இக்கால இலக்கியத் துறைக்குப் புதிய சிறப்புகளைச் சேர்த்திருக்கின்றன. பாரதிக்குப்பின் கவிதை மரபில் திருப்பம் விளைவித்தவை இவரது படைப்புகள்.**

1] கண்ணதாசன்

2] பாரதிதாசன்

3] பட்டுக்கோட்டை கலியாணசுந்தரனார்

**4] ந.பிச்சமூர்த்தி**

**13] மேழி பிடிக்கும்கை வேல்வேந்தர் நோக்கும்கை ஆழி தரித்தே அருளும்கை – சூழ்வினையை - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] சயம்கொண்டார்

2] பாரதியார்

**3] கம்பர்**

4] ஒளவையார்

**14] நீக்கும்கை என்றும் நிலைக்கும்கை நீடுழி காக்கும்கை காராளர் கை - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] சயம்கொண்டார்

2] பாரதியார்

**3] கம்பர்**

4] ஒளவையார்

**15] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] மேழி – கலப்பை, ஏர்

2] காராளர் – மேகத்தை ஆளுகின்றவர்களாகிய உழவர்

**3] ஆழி – வயல்**

4] சூழ்வினை – உண்டாகும் வறுமைத் துன்பம்

**குறிப்பு :- ஆழி – மோதிரம்**

**16] கம்பர் பிறந்த ஊர்?**

1] மன்னார்குடி, திருவாரூர்க்கு அண்மையில் உள்ளது

**2] தேரழுந்தூர், மயிலாடுதுறைக்கு அண்மையில் உள்ளது**

3] சாத்தூர், விருதுநகர்க்கு அண்மையில் உள்ளது

4] கோவில்பட்டி, தூத்துக்குடிக்கு அண்மையில் உள்ளது

**17] கம்பரை ஆதரித்த வள்ளல்?**

1] நச்சினார்க்கினியர்

**2] சடையப்ப வள்ளல்**

3] போகர்

4] இவர்களில் யாருமில்லை

**18] கம்பராமாயணம், சடகோபரந்தாதி, ஏரெழுபது, சரசுவதி அந்தாதி, திருக்கை வழக்கம் - ஆகிய நூல்களின் ஆசிரியர் யார்?**

1] மாணிக்கவாசகர்

2] ஔவையார்

**3] கம்பர்**

4] ஒட்டக்கூத்தர்

**19] கம்பர் அவர்களின் காலம்?**

1] 10 ஆம் நூற்றாண்டு

2] 11 ஆம் நூற்றாண்டு

**3] 12 ஆம் நூற்றாண்டு**

4] 13 ஆம் நூற்றாண்டு

**20] தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்; வேண்டாது சாலப் படும் - என்ற திருக்குறள் எதனைப் பற்றி விளக்குகிறது?**

1] வாழ்தல்

2] வரைதல்

**3] உழுதல்**

4] காத்திருத்தல்

**குறிப்பு :- ஒருபலம் எடையுள்ள மண்ணைக் கால்பலம் எடை அளவிற்கு உலரும் வரை உழுதிடுதல் வேண்டும். இதனைத்தான் வள்ளுவர் குறளில் கூறுகிறார்.**

**நன்செய் :- நீர்வளமிக்கது நன்செய் நிலம். இந்நிலத்தில் நெல், கரும்பு, வாழை முதலிய பயிர்கள் விளையும்.**

**புன்செய் :- நீர்வளம் குறைந்த பகுதி புன்செய். இதனை வானம் பார்த்த பூமி என நம் வேளாண் மக்கள் கூறுவர். இந்நிலத்தில விளையும் பயிர்கள் பருவமழையை**

**நம்பியே இருக்கும். இந்நிலத்தில் கம்பு, கேழ்வரகு, தினை, வரகு, சாமை, துவரை, கொள்ளு, காராமணி முதலிய பயிர்கள் விளையும்.**

**21] விதை நெல்லை முதலில் நாற்றங்காலில் விதைத்து ------------------------- நாள்வரை வளர்ப்பர்.**

1] 10 முதல் 12

**2] 21 முதல் 25**

3] 45 முதல் 50

4] 50 முதல் 100

**22] சரியானது எது? நெல்லுக்கு**

**1] நண்டோட**

2] ஏரோட

3] வண்டியோட

4] தேரோட

**23] சரியானது எது? கரும்புக்கு**

1] நண்டோட

**2] ஏரோட**

3] வண்டியோட

4] தேரோட

**24] சரியானது எது? வாழைக்கு**

1] நண்டோட

2] ஏரோட

**3] வண்டியோட**

4] தேரோட

**25] சரியானது எது? தென்னைக்கு**

1] நண்டோட

2] ஏரோட

3] வண்டியோட

**4] தேரோட**

**26] கீழ்க்கண்டவற்றுள் பஞ்சகவ்வியத்துடன் தொடர்புடையது எது?**

1] கோமயம், வேப்பிலை, பால், தயிர், நெய்

2] கோமயம், சாணம், விறகுகள், தயிர், நெய்

3] கோமயம், சாணம், பால், மணல், நெய்

**4] கோமயம், சாணம், பால், தயிர், நெய்**

**குறிப்பு :- பஞ்சகவ்வியம் :- பசுவிடமிருந்து கிடைக்கும் ஐந்து பொருள்கள் அதாவது கோமயம், சாணம், பால், தயிர், நெய் ஆகிய ஐந்து பொருள்களைக் கலந்து செய்வதே பஞ்சகவ்வியம். இதனைப் பயிரில் தெளிப்பதனால் புழு, பூச்சிகள் பயிர்களை நெருங்கா.**

**தழையுரம் :- பயிரிடும் முன் சணப்பை, அவுரி, கொளுஞ்சி, தக்கைப்பூண்டு முதலியவற்றை வளர்த்து, அவற்றை அப்படியேஉழுது தழையுரமாகப் பயன்படுத்துவர். இதனால், மண்ணின்வளம்கெடாமல்பேணிப்பாதுகாக்கப்படுவதனோடு பயிர்களும் நன்கு வளரும்.**

**27] கீழ்க்கண்ட திருக்குறள் எதனைப்பற்றி விளக்குகிறது?**

**ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்; நீரினும் நன்றதன் காப்பு**

1] உரமிடுதல்

**2] களையெடுத்தல்**

3] அறுவடை செய்தல்

4] நீர் பாய்ச்சுதல்

**குறிப்பு :- காப்பு என்றால் காத்தல் என்பது பொருள்.**

**28] பொருள்பட சீர்களை வரிசையாக அமைத்து எழுதுக?**

1] பார்க்காத கடனும் கேட்காத பயிரும் பாழ்

**2] கேட்காத கடனும் பார்க்காத பயிரும் பாழ்**

3] கேட்காத பாழ் கடனும் பார்க்காத பயிரும்

4] கேட்காத பயிரும் பார்க்காத கடனும் பாழ்

**29] வேளாண் பல்கலைக்கழகம் உள்ள இடம்?**

1] சென்னை

**2] கோவை**

3] மதுரை

4] திருச்சி

**30] வேளாண் தொழிலில் உள்ள கூறுகள்?**

1] 2 2] 4 **3] 6** 4] 8

**31] பஞ்சகவ்வியம் என்பது ---------------------- பொருள்களால் ஆனது?**

1] 2 2] 3 3] 4 **4] 5**

**32] தூரத்து ஒளி - என்னும் சிறுகதையின் ஆசிரியர் யார்?**

1] ராஜம் கிருஷ்ணன்

2] சி.சு.செல்லப்பா

3] வல்லிக்கண்ணன்

**4] க.கௌ. முத்தழகர்**

**குறிப்பு :- ( தூரத்து ஒளி - க.கௌ. முத்தழகர் - அக்பர் பீர்பால் நகைச்சுவைக் கதைகள் )**

**33] பெயரை வேறுபடுத்திக் காட்டும் உருபு வேற்றுமை உருபு எனப்படும். இவ்வேற்றுமை ------------------- வகைப்படும்.**

1] 2 2] 4 3] 6 **4] 8**

**குறிப்பு :- முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என எண்வகைப்படும்.**

**34] இயல்பான பெயர், (எழுவாய்) பயனிலையைக் கொண்டு முடிவது ------------------ எனவும், எழுவாய் வேற்றுமை எனவும் வழங்கப்படும். (இது வினையையும் பெயரையும் வினாவையும் பயனிலையாகக் கொண்டு முடியும்)**

**1] முதல் வேற்றுமை**

2] இரண்டாம் வேற்றுமை

3] மூன்றாம் வேற்றுமை

4] நான்காம் வேற்றுமை

**குறிப்பு :- (எ.கா.) : கண்ணன் வந்தான் – வினைப் பயனிலை அவன் கண்ணன் – பெயர்ப் பயனிலை அவன் யார்? – வினாப் பயனிலை எழுவாய் வேற்றுமைக்கு எனத் தனி உருபு இல்லை**

**35] இரண்டாம் வேற்றுமை உருபு "------------" என்பதாகும்.**

**1] ஐ**

2] ஆல்

3] கு

4] இன்

**குறிப்பு :- இரண்டாம் வேற்றுமை உருபு "ஐ" என்பதாகும். (எ.கா.) : வளவன் செய்யுளைப் படித்தான். இத்தொடரில் உள்ள செய்யுள் என்னும் பெயர்ச்சொல் "ஐ" என்னும் உருபையேற்றுச் செயப்படுபொருளாக வேறுபடுத்திக் காட்டுகிறது. இவ்வாறு பெயர்சொல்லினது பொருளைச் செயப்படுபொருளாக வேறுபடுத்துவது இரண்டாம் வேற்றுமை ஆகும்.**

**36] ------------------------ வேற்றுமை உருபுகள் "ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன்" ஆகியன.**

1] முதல் வேற்றுமை

2] இரண்டாம் வேற்றுமை

**3] மூன்றாம் வேற்றுமை**

4] நான்காம் வேற்றுமை

**குறிப்பு :- மூன்றாம் வேற்றுமை :- மூன்றாம் வேற்றுமை உருபுகள் "ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன்" ஆகியன. (எ.கா.) : நாற்காலி தச்சனால் செய்யப்பட்டது. – ஆல் தூங்குகையான் ஓங்குநடை – ஆன்; தாயொடு மகள் வந்தாள் – ஒடு; தந்தையோடு தாய் வந்தாள் – ஓடு; தந்தையுடன் தம்பியும் வந்தான் – உடன்;**

**37] நான்காம் வேற்றுமை உருபு "------------"?**

1] ஐ

**2] கு**

3] இன்

4] அது

**குறிப்பு :- நான்காம் வேற்றுமை உருபு "கு"(எ.கா.) : தலைவர் நந்தினிக்குப் பரிசு வழங்கினார்.**

**38] ------------ வேற்றுமை உருபுகள் "இல், இன்", என்பன.**

1] முதல்

2] மூன்றாம்

**3] ஐந்தாம்**

4] ஏழாம்

**குறிப்பு :- ஐந்தாம் வேற்றுமை :- ஐந்தாம் வேற்றுமை உருபுகள் "இல், இன்", என்பன. (எ.கா.) : கொடையில் சிறந்தவர் பாரி, இந்தியாவின் தெற்கு எல்லை குமரி. இத்தொடரில் கொடை, இந்தியா, என்னும் சொற்களுடன் இல், இன் என்னும் உருபுகள் சேர்ந்து பொருளை வேறுபடுத்துகின்றன.**

**39] ---------------- வேற்றுமை உருபு "அது" என்பது.**

1] முதல்

2] மூன்றாம்

**3] ஆறு**

4] ஏழாம்

**குறிப்பு :- ஆறாம் வேற்றுமை :- ஆறாம் வேற்றுமை உருபு “அது” என்பது. (எ.கா.) : இராமனது வீடு. எனது புத்தகம் இத்தொடரில் இராமன், என் ஆகிய பெயர்ச்சொற்களுடன் “அது”என்னும் வேற்றுமை உருபு சேர்ந்து பொருளை வேறுபடுத்துகிறது.**

**40] ---------------- வேற்றுமைக்குக் “கண், உள், மேல், கீழ்”, என்பன உருபுகளாகும்.**

1] முதல்

2] மூன்றாம்

3] ஆறு

**4] ஏழாம்**

**குறிப்பு :- ஏழாம் வேற்றுமை :- ஏழாம் வேற்றுமைக்குக் “கண், உள், மேல், கீழ்”, என்பன உருபுகளாகும். (எ.கா.) : வீட்டின்கண் குழந்தை விளையாடுகிறது. பெட்டிக்குள் பணம் இருக்கிறது. கூரையின்மேல் சேவல் உள்ளது. கட்டிலின் கீழ் நாய் படுத்துள்ளது. இத்தொடரில் வீடு, பெட்டி, கூரை, கட்டில் ஆகிய சொற்களுடன் கண், உள், மேல், கீழ் ஆகிய உருபுகள் சேர்ந்து இடப்பொருளை உணர்த்துகின்றன.**

**41] -------------------- வேற்றுமை உண்டு. ஆனால், அதற்கு உருபு இல்லை. இதனை “விளி வேற்றுமை” என அழைப்பர்.**

1] முதல்

2] மூன்றாம்

**3] எட்டாம்**

4] ஏழாம்

**குறிப்பு :- எட்டாம் வேற்றுமை : எட்டாம் வேற்றுமை உண்டு. ஆனால், அதற்கு உருபு இல்லை. இதனை "விளி வேற்றுமை" என அழைப்பர். (எ.கா.) : கந்தா வா! இத்தொடரில் கந்தன் என்னும் சொல்லில் இறுதி (ன்) எழுத்தானது கெட்டு, அதன் அயல் எழுத்து ( த - தா என) நீண்டு அழைத்தற் பொருளைத் தருகிறது. இவ்வாறு பெயர்ச்சொல் சில மாற்றங்களுடன் அழைத்தற் பொருளில் வருவதனை "விளி வேற்றுமை" என்பர்.**

**42] அமுதா --------------- எழுதினாள்**

**1] பாடத்தை**

2] பாடத்துக்கு

3] பாடத்தின்

4] பாடத்தினது

**43] முருகன் --------------- உயர்ந்தான்.**

1] உழைப்பை

**2] உழைப்பால்**

3] உழைப்பின்கண்

4] உழைப்புக்கு

**44] பண்டைய மன்னர்கள் தமிழ் --------- பாடுபட்டனர்.**

**1] வளர்ச்சிக்கு**

2] வளர்ச்சியில்

3] வளர்ச்சியை

4] வளர்ச்சியின் கண்

**45] பல வகைப்பட்டதாக இருக்கும் ஒரு பொருளை பொதுவாகச் சுட்டும் பொழுது, அதன் வகை குறித்து ஐயம் ஏற்படலாம். எனவே அவற்றை, இனம் பிரித்துக்காட்டுவதற்குத் தனிச்சொல்லைப் பயன்படுத்துவர். அத்தனிச்சொல் ------------------ எனப்படும்.**

1] அடுக்குத்தொடர்

2] இரட்டைக்கிளவி

3] வழு

**4] அடைமொழி**

**குறிப்பு :- இனமுள்ள அடைமொழி:- பாட நூல் எனச் சொல்லும்பொழுது, அதன் வகை குறித்து ஐயம் தோன்றும். அதனைப் போக்க தமிழ்ப் பாடநூல், ஆங்கிலப் பாடநூல், கணக்குப் பாடநூல், என அடைகொடுத்துக் கூறுதல் வேண்டும். இவ்வாறு பொருள்களை இனம்பிரித்தறிய உதவும் அடைமொழிகள் இனமுள்ள அடைமொழி எனப்படும்.**

**இனமில்லா அடைமொழிகள்:- வெண்ணிலவு, கருங்காக்கை, செங்கதிரோன் இவற்றுக்கெல்லாம் இனமாகக் கூற வேண்டுமானால், கருநிலவு, வெண்காக்கை, கருங்கதிரோன் எனக் கூறுதல் வேண்டும். அவ்வாறு ஒன்று இல்லாததனால் இவை போன்றவற்றிற்கு இனமில்லா அடைமொழிகள் எனக் கூறுவார்.**

**46] ஒரு சொல்லில், முதலிலுள்ள எழுத்தோ இடையில் உள்ள எழுத்தோ, இறுதியிலுள்ள எழுத்தோ மாறுபட்டாலும் பொருள் மாறுபடாது இருப்பின், அது --------- எனப்படும்.**

1] அடைமொழி

2] வழு

3] வழுவமைதி

**4] போலி**

**47] போலி எத்தனை வகைப்படும்?**

1] 1 2] 2 **3] 3** 4] 4

**குறிப்பு :- போலி,1. முதற்போலி; 2. இடைப்போலி; 3. இறுதிப்போலி என மூவகைப்படும். இறுதிப்போலியைக் கடைப்போலி எனவும் கூறுவர்.**

**48] ஒரு சொல்லின் முதலெழுத்து மாறினாலும் பொருள் மாறுபடாது வருவது ---------------- போலியாகும்.**

**1] முதற்போலி**

2] இடைப்போலி

3] இறுதிப்போலி

4] இவற்றில் ஏதுமில்லை

**குறிப்பு :- (எ.கா.) : மஞ்சு – மைஞ்சு; மயல் – மையல்.**

**49] ஒரு சொல்லின் இடையெழுத்து மாறினாலும் பொருள் மாறுபடாது இருப்பது ----------------- எனப்படும்.**

1] முதற்போலி

**2] இடைப்போலி**

3] இறுதிப்போலி

4] இவற்றில் ஏதுமில்லை

**குறிப்பு :- (எ.கா.) : முரசு – முரைசு; இலஞ்சி – இலைஞ்சி**

**50] ஒரு சொல்லின் ஈற்றெழுத்து மாறினாலும் பொருள் மாறுபடாது இருப்பது ------------------------------ எனப்படும்.**

1] முதற்போலி

2] இடைப்போலி

**3] இறுதிப்போலி (கடைப்போலி)**

4] இவற்றில் ஏதுமில்லை

**குறிப்பு :- (எ.கா.) : அறம் – அறன்; பந்தல் – பந்தர்.**

**51] ஒரு சொல்லின் எல்லா எழுத்துக்கள் மாறினாலும் பொருள் மாறுபடாது இருப்பது ------------------- எனப்படும்.**

**1] முற்றுப்போலி**

2] இடைப்போலி

3] இறுதிப்போலி (கடைப்போலி)

4] இவற்றில் ஏதுமில்லை

**குறிப்பு :- (எ.கா.) : ஐந்து – அஞ்சு என்னும் சொல்லில் உள்ள அனைத்து எழுத்துகளும் மாறியுள்ளன. இருப்பினும் பொருள் மாறவில்லை. எனவே, இது முற்றுப்போலி எனப்படும்.**

**52] பொருந்தாதது எது? பிறமொழிச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்களை அறிவோம்..**

1] அனுமதி - இசைவு

2] ஆதவன் - ஞாயிறு

3] ஆரம்பம்- தொடக்கம்

**4] ஆஸ்தி - உயில்**

**குறிப்பு :- ஆஸ்தி என்னும் பிறமொழிச் சொல்லிற்கு சரியான தமிழ்ச்சொல் சொத்து.**

**53] பொருந்தாதது எது? பிறமொழிச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்களை அறிவோம்..**

1] இம்சை - துன்பம்

**2] இருதயம் - உயிர்**

3] ஈசன் - இறைவன்

4] உபசரித்தல் - விருந்தோம்பல்

**குறிப்பு :- இருதயம் என்னும் பிறமொழிச் சொல்லிற்கு சரியான தமிழ்ச்சொல் நெஞ்சகம்.**

**54] பொருந்தாதது எது? பிறமொழிச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்களை அறிவோம்..**

1] ஐதீகம் - உலக வழக்கு

2] எதார்த்தம் - இயல்பு

3] உஷார் - விழிப்பு

**4] உபயம் - உண்டியல்**

**குறிப்பு :- உபயம் என்னும் பிறமொழிச் சொல்லிற்கு சரியான தமிழ்ச்சொல் திருப்பணியாளர் கொடை.**

**55] பொருந்தாதது எது? பிறமொழிச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்களை அறிவோம்..**

1] கிரீடம் - மணிமுடி

**2] காகிதம் - பேப்பர்**

3] உஷார் - விழிப்பு

4] குபேரன் - பெருஞ்செல்வன்

**குறிப்பு :- காகிதம் என்னும் பிறமொழிச் சொல்லிற்கு சரியான தமிழ்ச்சொல் தாள்.**

**56] பொங்கல் விழா நடைபெறும் காலம் இனிய காலம். கால் உலாவும் வானமும், நீர் உலாவும் ஏரியும் கருணை காட்டும் காலம். இயற்கையன்னை பசுமையான புடவை உடுத்துப் பன்னிறப் பூக்களைச் சூடி, இனிய காயும் கனியும் கரும்பும் அணிந்து இன்பக்காட்சி தருங்காலம். - இந்த கூற்று யாருடையது?**

1] திரு.வி.க

2] கண்ணதாசன்

3] மறைமலையடிகள்

**4] ரா.பி.சேதுப்பிள்ளை**

**57] பொங்கலுக்குத் தலைநாள் போகி. போகியை அடுத்து வருவது பொங்கல் புதுநாள். அந்நாளில் 'பழையன கழிதலும், புதியன புகுதலும்' நிகழும்; வீட்டிலுள்ள பழம்பானைகள் விடைபெறும்; புதுப் பானைகளில் பொங்கல் நடைபெறும்; பால் பொங்கும் பொழுது, "பொங்கலோ பொங்கல்" என்னும் மங்கள ஒலி எங்கும் கிளம்பும்; அப்பொழுது, பெண்கள் குரவை ஆடுவர்; பிறகு, "பூவும் புகையும் பொங்கலும்" கொண்டு இல்லுறை தெய்வத்தை வணங்குவர்; அனைவரும் வயிறார உண்டு மகிழ்வர்; - இந்த கூற்று யாருடையது?**

1] திரு.வி.க

2] கண்ணதாசன்

3] மறைமலையடிகள்

**4] ரா.பி.சேதுப்பிள்ளை**

**58] ஏழைக்குப் பரிசு கிடைக்க பீர்பால் செய்த செயல் என்ன?**

1] வேட்டை

**2] சமையல்**

3] வீதியுலா

4] நடனம்

## ஏழாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 8

**1] விடுபட்டதை நிரப்புக?**

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**

---------- ----------- ----------

**1] நிற்க அதற்குத் தக**

2] கண்என்ப வாழும் உயிர்க்கு

3] புண்உடையர் கல்லா தவர்

4] அனைத்தே புலவர் தொழில்

**2] விடுபட்டதை நிரப்புக?**

**எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**

---------- ----------- ----------

1] நிற்க அதற்குத் தக

**2] கண்என்ப வாழும் உயிர்க்கு**

3] புண்உடையர் கல்லா தவர்

4] அனைத்தே புலவர் தொழில்

**3] விடுபட்டதை நிரப்புக?**

**கண்உடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**

---------- ----------- ----------

1] நிற்க அதற்குத் தக

2] கண்ணென்ப வாழும் உயிர்க்கு

**3] புண்உடையர் கல்லா தவர்**

4] அனைத்தே புலவர் தொழில்

**4] விடுபட்டதை நிரப்புக?**

**உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்**

--------- ---------- ---------

1] நிற்க அதற்குத் தக

2] கண்ணென்ப வாழும் உயிர்க்கு

3] புண்உடையர் கல்லா தவர்

**4] அனைத்தே புலவர் தொழில்**

**5] விடுபட்டதை நிரப்புக?**

**உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்**

------------ ---------- ---------

**1] கடையரே கல்லா தவர்**

2] கற்றனைத்து ஊறும் அறிவு

3] சாந்துணையும் கல்லாத வாறு

4] எழுமையும் ஏமாப்பு உடைத்து

**6] விடுபட்டதை நிரப்புக?**

**தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்**

**--------- ----------- -------------**

1] கடையரே கல்லா தவர்

**2] கற்றனைத்து ஊறும் அறிவு**

3] சாந்துணையும் கல்லாத வாறு

4] எழுமையும் ஏமாப்பு உடைத்து

**7] விடுபட்டதை நிரப்புக?**

**யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**

**----------- -------- ---------**

1] கடையரே கல்லா தவர்

2] கற்றனைத்து ஊறும் அறிவு

**3] சாந்துணையும் கல்லாத வாறு**

4] எழுமையும் ஏமாப்பு உடைத்து

**8] விடுபட்டதை நிரப்புக?**

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**

**---------- ------------ -------------**

1] கடையரே கல்லா தவர்

2] கற்றனைத்து ஊறும் அறிவு

3] சாந்துணையும் கல்லாத வாறு

**4] எழுமையும் ஏமாப்பு உடைத்து**

**9] விடுபட்டதை நிரப்புக?**

**தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு**

----------- ---------- --------

**1] காமுறுவர் கற்றறிந் தார்**

2] கற்றனைத்து ஊறும் அறிவு

3] சாந்துணையும் கல்லாத வாறு

4] எழுமையும் ஏமாப்பு உடைத்து

**10] விடுபட்டதை நிரப்புக?**

**கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**

--------- ---------- ----------

**1] மாடல்ல மற்றை யவை**

2] கற்றனைத்து ஊறும் அறிவு

3] சாந்துணையும் கல்லாத வாறு

4] எழுமையும் ஏமாப்பு உடைத்து

**11] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

**1] கசடு – நன்மை**

2] நிற்க – கற்றவாறு நடக்க

3] எண் – எண்கள், கணக்கு

4] எழுத்து – இலக்கண இலக்கியங்கள் (வரிவடிவம்)

**குறிப்பு :- கசடு – குற்றம்**

**12] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

**1] உவப்ப – வெகுளி**

2] தலைக்கூடி – ஒன்றுசேர்ந்து

3] உடையார் – செல்வர்

4] இல்லார் – ஏழை

**குறிப்பு :- உவப்ப – மகிழ**

**13] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] ஏக்கற்று – கவலைப்பட்டு

**2] கடையர் – செல்வர்**

3] தொட்டனைத்து – தோண்டும் அளவு

4] மாந்தர் – மக்கள்

**குறிப்பு :- கடையர் – தாழ்ந்தவர்**

**14] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] சாந்துணையும் – சாகும்வரையிலும்

2] ஏமாப்பு – பாதுகாப்பு

**3] காமுறுவர் – விரும்பாதவர்**

4] மாடு – செல்வம்

**குறிப்பு :- காமுறுவர் – விரும்புவர்**

**15] தத்தும் பாய்புனல் முத்தம் அடைக்கும்; சாலைவாய்க் கன்னல் ஆலை யுடைக்கும் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] கலிங்கத்துப்பரணி, சயம்கொண்டார்

2] புறநானூறு, ஔவையர்

**3] முக்கூடற்பள்ளு, ஆசிரியர் பெயர் தெரியவில்லை**

4] பெரிய புராணம், சேக்கிழார்

**16] கத்தும் பேரிகைச் சத்தம் புடைக்கும்; கலிப்பு வேலை ஒலிப்பைத் துடைக்கும் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] கலிங்கத்துப்பரணி, சயம்கொண்டார்

2] புறநானூறு, ஔவையர்

**3] முக்கூடற்பள்ளு, ஆசிரியர் பெயர் தெரியவில்லை**

4] பெரிய புராணம், சேக்கிழார்

**17] நித்தம் சாறயர் சித்ரம் படைக்கும்; நிதியெல் லாந்தன் பதியிற் கிடைக்கும் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] கலிங்கத்துப்பரணி, சயம்கொண்டார்

2] புறநானூறு, ஒளைவையர்

**3] முக்கூடற்பள்ளு, ஆசிரியர் பெயர் தெரியவில்லை**

4] பெரிய புராணம், சேக்கிழார்

**குறிப்பு :- இந்நூலின் ஆசிரியர் யாரெனத் தெரியவில்லை. ஆயினும், நாடகப் பாங்கில் அமைந்த இந்நூலை இயற்றியவர் என்னயினாப் புலவர் எனச் சிலர் கூறுவர். சந்தநயம் அமைந்த பாக்களைக் கொண்ட இந்நூலில், திருநெல்வேலி மாவட்டப் பேச்சு வழக்கை ஆங்காங்கே காணலாம்.**

winmeen

**18] மத்தகஞ் சூடும் மதோன்மத்த ரான ; மருதீசர் மருதூர் எங்கள் ஊரே - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] கலிங்கத்துப்பரணி, சயம்கொண்டார்

2] புறநானூறு, ஒளைவையர்

**3] முக்கூடற்பள்ளு, ஆசிரியர் பெயர் தெரியவில்லை**

4] பெரிய புராணம், சேக்கிழார்

**குறிப்பு :- இந்நூலின் ஆசிரியர் யாரெனத் தெரியவில்லை. ஆயினும், நாடகப் பாங்கில் அமைந்த இந்நூலை இயற்றியவர் என்னயினாப் புலவர் எனச் சிலர் கூறுவர். சந்தநயம் அமைந்த பாக்களைக் கொண்ட இந்நூலில், திருநெல்வேலி மாவட்டப் பேச்சு வழக்கை ஆங்காங்கே காணலாம்.**

**19] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] தத்தும் புனல் - தத்திச் செல்லும் நீர்

2] முத்தம் அடைக்கும் - முத்துகள் மிக்குப் பெருகி இடையே அடைத்துக்கொண்டு கிடக்கும்

3] கலிப்பு வேலை - கருமார், கொல்லர், தட்டார் முதலியோர் செய்யும் தொழில்கள்

**4] சித்ரம் - உயரம்**

**குறிப்பு :- சித்ரம் - சிறப்பான காட்சிகள்; மதோன்மத்தர் - பெரும்பித்தனாகிய சிவபெருமான்**

**20] முக்கூடற்பள்ளு நூலின் ஆசிரியர் யாரெனத் தெரியவில்லை. ஆயினும், நாடகப் பாங்கில் அமைந்த இந்நூலை இயற்றியவர் என்னயினாப் புலவர் எனச் சிலர் கூறுவர். சந்தநயம் அமைந்த பாக்களைக் கொண்ட இந்நூலில், ------------------ மாவட்டப் பேச்சு வழக்கை ஆங்காங்கே காணலாம்.**

1] கோவை

2] சென்னை

3] மதுரை

**4] திருநெல்வேலி**

**21] நீர் நிறைந்த பள்ளமான சேற்று நிலத்தில் உழவுத்தொழில் செய்து வாழும் பாமர மக்களாகிய பள்ளர்களின் வாழ்க்கையைச் சித்தரித்துக் கூறுவதாக அமைந்த நூல், ------------- ?**

1] கலிங்கத்துப்பரணி

2] குறுந்தொகை

**3] பள்ளு**

4] இரட்டுறமொழிதல்

**22] ---------------------- ஊருக்கு சற்று வடகிழக்கில் தண்பொருநை, சிற்றாறு, கோதண்டராம ஆறு ஆகிய மூன்று ஆறுகள் கூடும் இடத்திற்கு வடக்கே உள்ள சிற்றூர், முக்கூடல். இதற்கு, அசூர் வடகரை நாடு என்னும் பெயரும் உண்டு. தென்பால் உள்ள பகுதி, சீவலமங்கைத் தென்கரை நாடு என வழங்கப் பெறுகிறது.**

1] கோவை

2] சென்னை

3] மதுரை

**4] திருநெல்வேலி**

**23] திருநெல்வேலிக்குச் சற்று ------------------- தண்பொருநை, சிற்றாறு, கோதண்டராம ஆறு ஆகிய மூன்று ஆறுகள் கூடும் இடத்திற்கு வடக்கே உள்ள சிற்றூர், முக்கூடல்.**

1] தென்மேற்கில்

2] தென்கிழக்கில்

**3] வடகிழக்கில்**

4] வடமேற்கில்

**24] முக்கூடல் - இதற்கு, ------------------- என்னும் பெயரும் உண்டு.**

1] சதுரகிரி

2] பாஞ்சாலங்குறிச்சி

3] சூளூர் பேட்டை

**4] அசூர் வடகரை நாடு**

**25] தென்கரை நாட்டில் மருதீசர் வீற்றிருக்கும் ஊர் ----------?**

1] திருச்செந்தூர்

2] திருவில்லிபுத்தூர்

3] மதுரை

**4] மருதூர்**

**26] முக்கூடலில் வாழும் பள்ளி மூத்த மனைவி, மருதூரில் வாழும் பள்ளி இளைய மனைவி. இருவரையும் மணந்து வாழும் ஒருவனின், வாழ்க்கை வளத்தை வடித்துரைப்பதுப்போலப் பாடப்பட்ட இந்நூல், ----------------- எனப் பெயர் பெற்றது.**

1] பரணி

2] காப்பியம்

3] இரட்டுற மொழிதல்

**4] முக்கூடற்பள்ளு**

**27] ----------------- கற்பதனால், அக்கால மக்களின் உழவுத்தொழில் பற்றியும் அச்சமுதாயத்தைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம். காளைகளின் பல்வேறு பெயர்கள், விதைகளின் பெயர்கள், மீன்வகைகள் என மருத நிலவளம் பற்றியும் அறியலாம்.**

1] பரணி

2] காப்பியம்

3] இரட்டுற மொழிதல்

**4] முக்கூடற்பள்ளு**

**28] ஒன்பது மணிகள் - சரியான வரிசை எது?**

1] முத்து, மரகதம், மாணிக்கம், பவளம்

2] முத்து, மரகதம், பவளம், மாணிக்கம்

3] முத்து, பவளம், மாணிக்கம், மரகதம்

**4] முத்து, பவளம், மரகதம், மாணிக்கம்**

**குறிப்பு :- சரியான வரிசை :- முத்து, பவளம், மரகதம், மாணிக்கம், புட்பராகம், இரத்தினம், வைரம், வைடூரியம், கோமேதகம்**

**29] ஒன்பது மணிகள் - சரியான வரிசை எது?**

1] மாணிக்கம், இரத்தினம், புட்பராகம், வைரம்

2] மாணிக்கம், வைரம், புட்பராகம், இரத்தினம்

3] வைரம், மாணிக்கம், புட்பராகம், இரத்தினம்

**4] மாணிக்கம், புட்பராகம், இரத்தினம், வைரம்**

**குறிப்பு :- சரியான வரிசை :- முத்து, பவளம், மரகதம், மாணிக்கம், புட்பராகம், இரத்தினம், வைரம், வைடூரியம், கோமேதகம்**

**30] ஒன்பது மணிகள் - சரியான வரிசை எது?**

1] இரத்தினம், வைரம், கோமேதகம், வைடூரியம்

2] வைரம், இரத்தினம், வைடூரியம், கோமேதகம்

3] கோமேதகம், இரத்தினம், வைரம், வைடூரியம்

**4] இரத்தினம், வைரம், வைடூரியம், கோமேதகம்**

**குறிப்பு :- சரியான வரிசை :- முத்து, பவளம், மரகதம், மாணிக்கம், புட்பராகம், இரத்தினம், வைரம், வைடூரியம், கோமேதகம்**

**31] ---------------- ஓரினத்தின் வீரத்தையும் பண்பாட்டையும் வெளிப்படுத்துவன.**

1] போர்

**2] விளையாட்டு**

3] விவசாயம்

4] இவற்றில் ஏதுமில்லை

**32] விளையாட்டின் அடிப்படை நோக்கம் -----------?**

1] வெற்றி பெறுவது

2] நிலைத்து நிற்பது

**3] போட்டியிடுதல்**

4] இவற்றில் ஏதுமில்லை

**33] முற்காலத்தில் மற்போரில் வல்ல மல்லர், மன்னரால் மதிக்கப் பெற்றனர். களத்தில் பல்லாயிரவர் சூழ்ந்து நிற்க, தருக்கும், செருக்கும் நிரம்பிய ஆமூர் மல்லனுக்கும் வீரமும் தீரமும் வாய்ந்த நற்கிள்ளிக்கும் இடையே நடைபெற்ற வீர விளையாட்டை --------------------- என்னும் சங்க இலக்கிய நூல் வருணிக்கிறது.**

1] அகநானூறு

2] குறுந்தொகை

3] நற்றிணை

**4] புறநானூறு**

**34] ------------- நிலத்தில் ஏறுதழுவுதல் என்னும் வீரவிளையாட்டு நடைபெற்றது.**

1] குறிஞ்சி

**2] முல்லை**

3] மருதம்

4[ நெய்தல்

**35] அரங்கு இழைத்து (கட்டம் வரைந்து) நெல்லிக்காய்களை வைத்து நகர்த்தி ஆடும் ஆட்டம் -------------- ஆகும்.**

1] தட்டாடுதல்

**2] வட்டாடுதல்**

3] பல்லாங்குழி

4] காட்டாடுதல்

**36] அக்கால மகளிர் நண்டு, ஆமை ஆகியவற்றைக் கோல் கொண்டு அலைந்து ----------------- ஆடி மகிழ்ந்தனர்.**

1] தட்டாடுதல்

2] வட்டாடுதல்.

3] பல்லாங்குழி

**4] ஓரையாட்டம்**

**37] ------------- ஊரில் உள்ள தமுக்கம் மைதானம் யானைப்போர் காண்பதற்கான திடலாகும்.**

1] கோவை

2] திருச்சி

3] சென்னை

**4] மதுரை**

**38] சோழநாட்டின் பழைய தலைநகரமான உறந்தையூரில் வீரக்கோழிகள் சிறந்திருந்தமையால் --------------- என்னும் பெயரும் அதற்கமைந்தது என்பர்.**

**1] கோழியூர்**

2] கோழிப்பட்டி

3] கோலீச்சேவூர்

4] இவற்றில் ஏதுமில்லை

**39] நண்பன் - என்னும் சிறுகதையின் ஆசிரியர் யார்?**

**1] ஓவியர் ராம்கி, மரியாதைராமன் கதைகள்**

2] ராஜம் கிருஷ்ணன்

3] சி.சு. செல்லப்பா

4] சுஜாதா

**40] பதம் என்றாலும் சொல் என்றாலும் ஒன்றே. மொழி, கிளவி என்பன அதன் வேறு பெயர்கள். ஒரெழுத்தானது தனித்து நின்று பொருள் தந்தால் அஃது ஒரெழுத்து ஒருமொழி எனப்படும். இவை ----------------- உள்ளன.**

1] 12 2] 23 3] 32 **4] 42**

**41] யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்; வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல், பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை; உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை; - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**42] ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய் ; வாழ்கின்றோம்; ஒருசொற் கேளீர்!சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்; தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்! - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**43] பொருந்தாதது எது? சொற்றொடர் வகைகள்.**

1] நேற்று, எங்கள் பள்ளியில் ஆண்டுவிழா நடைபெற்றது - செய்தித்தொடர்

2] உன் இருப்பிடம் எங்கு உள்ளது? - வினாத்தொடர்

**3] இளமையில் கல் - செய்தித்தொடர்**

4] என்னே, இந்த ஓவியத்தின் அழகு! - உணர்ச்சித்தொடர்

**குறிப்பு :- இளமையில் கல் - கட்டளைத்தொடர்**

**44] பொருந்தாதது எது? சொற்றொடர் வகைகள்.**

1] காந்தியடிகள் தீண்டாமையை எதிர்த்துப் போராடினார் - செய்தித்தொடர்

2] தொல்காப்பியன் வீட்டுக்கு வந்திலன் - எதிர்மறைச் சொற்தொடர்

3] என்னே, தாஜ்மகாலின் அழகு! - உணர்ச்சித்தொடர்

**4] வீட்டைத் தூய்மையாய் வைத்திரு - செய்தித்தொடர்**

**குறிப்பு :- வீட்டைத் தூய்மையாய் வைத்திரு - கட்டளைத்தொடர்**

**45] இயல்வது கரவேல்; ஈவது விலக்கேல் - என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

**2] ஔவையார்**

3] பாரதிதாசன்

4] வாணிதாசன்

**46] பிறரை எதிர்பார்த்து வாழாதவன் தமிழன்; பிறர்க்கு புறமுதுகு காட்டி ஓடாதவன் தமிழன்; முடியுடை வேந்தரின் சந்ததியில் வந்தவன் தமிழன்; பல தூர அயல்நாடுகளோடு சிறப்பாக வாணிகம் நடத்தியவன் தமிழன்; கடல் கடந்தவன்**

**தமிழன்; கடல் கடந்து சென்று பர்மா தேசத்தை கைப்பற்றி ஆண்டவன் தமிழன்; - இந்த கூற்று யாருடையது?**

1] மு.வரதராசனார்

**2] அண்ணா**

3] திரு.வி.க

4] மறைமலையடிகள்

**47] இமயத்தில் புலி பொறித்தவன் தமிழன்; கடாரத்தை வென்றவன் தமிழன்; ரோம் நகருக்கு பொன்னாடை விற்றவன் தமிழன்; இலக்கிய சுவையை கண்டவன் தமிழன்; எந்நாடும் வியக்கும் வீரன் தமிழன்; - இந்த கூற்று யாருடையது?**

1] மு.வரதராசனார்

**2] அண்ணா**

3] திரு.வி.க

4] மறைமலையடிகள்

**48] ஏறு நடையுடையான் தமிழன்; இன்னல் கண்டும் புன்னகை புரிவான் தமிழன்; தன்னலங் கருதாது உழைத்தான் தமிழன்; சூதும் வாதும் விருப்பும் வெறுப்பும் அறியான் தமிழன்; மானமே பெரிது என மதித்தான் தமிழன்; கப்பலோட்டினான் தமிழன்; எவ்வுயிரையும் தன்னுயிர்ப் போல காத்து வந்தான் தமிழன். - இந்த கூற்று யாருடையது?**

1] மு.வரதராசனார்

**2] அண்ணா**

3] திரு.வி.க

4] மறைமலையடிகள்

**49] பகுபத உறுப்புகளின் எண்ணிக்கை?**

1] 2 2] 4 **3] 6** 4] 8

## ஏழாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 9

**1] இனிமைத் தமிழ்மொழி எமது – எமக்கு; இன்பந் தரும்படி வாய்த்தநல் அமுது ; கனியைப் பிழிந்திட்ட சாறு – எங்கள்; கதியில் உயர்ந்திடயாம் பெற்ற பேறு ! - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**குறிப்பு :- இப்பாடல் பாரதிதாசன் கவிதைகள் என்னும் கவிதைத் தொகுதியில் எங்கள் தமிழ் என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ளது.**

**2] தனிமைச் சுவையுள்ள சொல்லை – எங்கள் ; தமிழினும் வேறெங்கும் யாங்கண்டதில்லை ; நனியுண்டு நனியுண்டு காதல் – தமிழ்; நாட்டினர் யாவர்க்கு மேதமிழ் மீதில் ( இனிமைத் ) - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**குறிப்பு :- இப்பாடல் பாரதிதாசன் கவிதைகள் என்னும் கவிதைத் தொகுதியில் எங்கள் தமிழ் என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ளது.**

**3] தமிழ் எங்கள் உயிர்என்ப தாலே – வெல்லுந்; தரமுண்டு தமிழருக் கிப்புவி மேலே; தமிழ்என்னில் எம்முயிர்ப் பொருளாம் – இன்பத்; தமிழ்குன்று மேல்தமிழ் நாடெங்கும் இருளாம் - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**குறிப்பு :- இப்பாடல் பாரதிதாசன் கவிதைகள் என்னும் கவிதைத் தொகுதியில் எங்கள் தமிழ் என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ளது.**

**4] தமிழுண்டு தமிழ்மக்க ளுண்டு – இன்பத்; தமிழுக்கு நாளும்செய் வோம்நல்ல தொண்டு; தமிழ்என்று தோள்தட்டி ஆடு – நல்ல; தமிழ்வெல்க வெல்க என்றே தினம்பாடு ( இனிமைத் ) - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**குறிப்பு :- இப்பாடல் பாரதிதாசன் கவிதைகள் என்னும் கவிதைத் தொகுதியில் எங்கள் தமிழ் என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ளது.**

**5] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

**1] கதி – பகை**

2] பேறு – செல்வம்

3] நனி – மிகுதி (மிக்க)

4] தரம் – தகுதி

**குறிப்பு :- கதி – துணை**

**6] சுப்புரத்தினம் என்னும் இயற்பெயர் உடைய கவிஞர் யார்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**குறிப்பு :- சுப்புரத்தினம், பாரதியார்மீது கொண்ட பற்றினால் பாரதிதாசன் எனத் தன்பெயரை மாற்றி அமைத்துக்கொண்டார்.**

**7] பாரதிதாசன் அவர்களின் பெற்றோர் பெயர் என்ன?**

1] வெங்கட்ராமன் - அம்மணியம்மாள்

2] சாத்தப்பன் - விசாலாட்சி

3] அய்யாதுரை - மிளகாயிஅம்மாள்

**4] கனகசபை - இலக்குமி அம்மாள்**

**8] இந்த கூற்று யாருடன் தொடர்புடையது?**

**தமிழ், பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகியவற்றில் புலமை மிக்கவர். குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, சேர தாண்டவம்,இருண்ட வீடு, தமிழச்சியின் கத்தி, பிசிராந்தையார், குறிஞ்சி திட்டு, அழகின் சிறப்பு, தமிழியக்கம் முதலியன.**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**9] பாரதிதாசன் அவர்களின் காலம்?**

**1] 29.04.1891 – 21.04.1964**

2] 29.04.1892 – 21.04.1965

3] 29.04.1893 – 21.04.1966

4] 29.04.1894 – 21.04.1967

**10] வீழ்ந்து வெண்மழை தவழும் விண்ணுறு பெருவரை; பெரும்பாம்பு ஊழ்ந்து தோலுரிப் பனபோல் ஒத்த மற்றவற் றருவி; - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

**3] சீவகசிந்தாமணி, திருத்தக்கதேவர்**

4] கம்பராமாயணம், கம்பர்

**11] தாழ்ந்து வீழ்ந்தவை முழவின் ததும்பின் மதுகரம் பாடச் சூழ்ந்து மாமயி லாடி நாடகம் துளக்குறுத் தனவே - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

**3] சீவகசிந்தாமணி, திருத்தக்கதேவர்.**

4] கம்பராமாயணம், கம்பர்

**12] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] விண் – வானம்

2] வரை – மலை

**3] முழவு – காடு**

4] மதுகரம் – தேன் உண்ணும் வண்டு

**குறிப்பு :- முழவு – மத்தளம்**

**13] திருத்தக்கதேவர் ------------------ அரச குலத்தில் பிறந்தவர்.**

1] சேரர்

**2] சோழர்**

3] பாண்டியர்

4] பல்லவர்

**14] திருத்தக்கதேவர் ---------------------- சமயத்தைச் சார்ந்தவர்.**

**1] சமணம்**

2] புத்தம்

3] கிறித்துவம்

4] ஜொராஸ்டிரியம்

**15] திருத்தக்கதேவர் அவர்களின் காலம்?**

1] கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு

**2] கி.பி. பத்தாம் நூற்றாண்டு**

3] கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டு

4] கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு

**16] நரி விருத்தம் - என்ற நூலின் ஆசிரியர் யார்?**

1] இளங்கோவடிகள்

2] சீத்தலைச்சாத்தனார்

**3] திருத்தக்கதேவர்**

4] கம்பர்

**17] ---------------- நூல்களுள் ஒன்று சீவகசிந்தாமணி.**

1] எட்டுத்தொகை

2] பத்துப்பாட்டு

**3] ஐம்பெரும் காப்பியங்கள்**

4] ஐம்சிறும் காப்பியங்கள்

**18] கீழ்க்கண்ட நூல்களுள் 'மணநூல்' - என வழங்கப்படும் நூல் எது?**

1] சிலப்பதிகாரம்

2] மணிமேகலை

**3] சீவகசிந்தாமணி**

4] கம்பராமாயணம்

**19] திருத்தக்கதேவர் இயற்றிய வேறு நூல்?**

1] கரி விருத்தம்

**2] நரி விருத்தம்**

3] பரி விருத்தம்

4] இவற்றில் ஏதுமில்லை

**20] காண்பவரைக் கவர்ந்திழுத்து உள்ளங்களைத் தன்வயப்படுத்தும் உயர்ந்தகலை ------------?**

1] பேச்சுக்கலை

2] நடிப்புக்கலை

**3] ஓவியக்கலை**

4] இவற்றில் ஏதுமில்லை

**21] தமிழ்நாட்டில் சங்க காலத்திற்கு முன்னரே ஓவியங்கள் வரையப்பட்டன. தாம் வரைந்த ஓவியங்களை முதலில் கண்ணெழுத்து என்றே வழங்கியுள்ளனர். தமிழ் இலக்கியத்தில் எழுத்து என்பதற்கு ஓவியம் எனப் பொருள் இருந்ததனை --------------- மற்றும் ---------------- செய்யுள் அடிகள் தெளிவுபடுத்துகின்றன.**

**1] பரிபாடல், குறுந்தொகை**

2] புறநானூறு, அகநானூறு

3] நற்றிணை, கலித்தொகை

4] ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து

**22] ------------ மொழியிலும் எழுத்துகள் உருவங்களாக உள்ளன.**

1] எகிப்து

**2] சீன**

3] ஆப்பிரிக்க

4] ஆங்கில

**23] ஓவியம் வரைவதற்கு நேர்கோடு, கோணக்கோடு, வளைகோடு முதலியன அடிப்படையாகும். இவ்வாறு வரையப்படுபவை --------------------- எனப்படும்.**

1] காலஓவியங்கள்

2] கைஓவியங்கள்

**3] கோட்டோவியங்கள்**

4] இவற்றில் ஏதுமில்லை

**குறிப்பு:- அவ்வரை கோடுகளின்மேல் சிவப்பு, கருப்பு, மஞ்சள், நீலம், முதலிய வண்ணங்கள் பூச, அழகிய ஓவியங்களாக உருவெடுக்கும்.**

**24] ------------------- நடுகல் வணக்கம் பற்றிக் கூறுகிறது.**

1] அகத்தியம்

**2] தொல்காப்பியம்**

3] திருக்குறள்

4] இராமாயணம்

**குறிப்பு :- நடுகல்லில் போரில் வீரமரணம் எய்திய வீரனது உருவம், பெயர், பெருமைக்குரிய செயல் முதலியனவற்றைப் பொறிக்கும் பழக்கம் இருந்தது. சிற்பி, தான் செதுக்கவிருக்கும் உருவத்தை முதலில் வரைந்து பார்த்த பின்னரே, அவ்வோவியத்தைக்கொண்டு கல்லில் உருவம் அமைத்தல் மரபு. இதன்படி ஆராய்ந்து நோக்கினால் செதுக்குவதற்கு ஓவியம் துணை புரிந்ததனையும், ஓவியம் முன்னரே வளர்ந்திருந்ததனையும் உணர முடிகின்றது.**

**25] கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாதது எது? ஓவியக்கலை ஓவு, ஓவம், ஓவியம், சித்திரம், படம், பாடம், படாம், வட்டிகைச்செய்தி எனப் பல பெயர்களால் வழங்கப்பெற்றது.**

1] படம்

**2] பாடம்**

3] படாம்

4] வட்டிகைச்செய்தி

**26] கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாதது எது?**

**ஓவியக் கலைஞர் ஓவியர், ஓவியப்புலவன், ஓவிய விசித்திரன், கண்ணுள் வினைஞன், சித்திரக்காரர், வித்தக வினைஞன், வித்தகர், கிளவி வல்லோன் என அழைக்கப்பட்டார்.**

1] ஓவியப்புலவன்

**2] ஓவிய விசித்திரன்**

3] கண்ணுள் வினைஞன்

4] சித்திரக்காரர்

**27] ஓவியர் எண்ணங்களின் எழுச்சியைப் பல வண்ணங்களின் துணைகொண்டு எழுதுவோராதலின் --------------------- எனப் புகழ்பெற்றார்.**

1] ஓவியப்புலவன்

2] ஓவிய விசித்திரன்

**3] கண்ணுள் வினைஞர்**

4] சித்திரக்காரர்

**28] -------------- என்பவர், தம் உரையில் ஓவியருக்கு, 'நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழில் நிறுத்துவோர்' என இலக்கணம் வகுத்திருப்பது எத்துணைப் பொருத்தம் பார்த்தீர்களா?**

1] கம்பர்

2] சடையப்ப வள்ளல்

**3] நச்சினார்க்கினியர்**

4] உமறுப்புலவர்

**29] ஓவிய நூலின் நுணுக்கத்தை நன்கு கற்றுப் புலமைபெற்ற ஆசிரியர் ----------------- எனப் போற்றப்பட்டார்.**

1] ஓவிய விசித்திரன்

2] ஓவியக் கவி

3] ஓவியச் சக்கரவர்த்தி

**4] ஓவியப் புலவன்**

**30] ஓவியக் கலைஞர் குழுவை ---------------- என்றழைத்தனர்.**

1] ஓவிய தாசர்கள்

2] ஓவிய சித்திரர்கள்

3] ஓவிய குருக்கள்

**4] ஓவிய மாக்கள்**

**31] ஆண் ஓவியர் ---------------------- என அழைக்கப்பெற்றார்.**

**1] சித்திராங்கதன்**

2] சிம்ம சித்திரன்

3] சித்திர தாசன்

4] சித்திர வினைஞன்

**32] பெண் ஓவியர் ---------------------- என அழைக்கப்பெற்றார்.**

**1] சித்திரசேனா**

2] ஓவியா

3] விசித்திரகை

4] விசித்திரா

**33] ஆடல் மகள் மாதவி, 'ஓவியச் செந்நூல் உரை நூற்கிடக்கையும் கற்றுத்துறை போகப் பொற்றொடி மடந்தையாக இருந்தனள்' என ---------------- நூல் கூறுகிறது.**

1] மணிமேகலை

2] சீவகசிந்தாமணி

**3] சிலப்பதிகாரம்**

4] பெரியபுராணம்

**34] பல்வகைக் காட்சிகள், உருவகங்கள் வரைய ஓவியர் அக்காலத்தில் பல்வகைக் கருவிகளைப் பயன்படுத்தினர். வண்ணந்தீட்டும் கோல் தூரிகை, துகிலிகை, வட்டிகை எனப்பட்டது. வண்ணங்கள் குழப்பும் பலகைக்கு ------------------ எனப் பெயரிட்டிருந்தனர்.**

1] வட்டிகை புத்தகம்

2] வட்டிகை இடம்

3] வட்டிகை தூண்

**4] வட்டிகைப் பலகை**

**35] கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது?**

**அக்காலத்தில் ஓவியங்கள் வரைவதற்கென்று தனியே இடங்கள் அமைந்து இருந்தன. இங்கனம் ஓவியம் வரையப்பட்ட இடங்கள் சித்திரக்கூடம், சித்திரைச் சாலை, சித்திரமாடம், எழுதுநிலை மண்டபம், எழுதெழில் அம்பலம் என வழங்கப்பட்டன.**

1] சித்திரக்கூடம்

**2] சித்திரைச் சாலை**

3] சித்திரமாடம்

4] எழுதுநிலை மண்டபம்

**36] அக்காலத்தில் நடனம் புரிவதற்கே ------------- ஒன்றனை ஏற்படுத்தியுள்ளனர்.**

1] நடன புரி

2] நடனச் சாலை

**3] சித்திர சபை**

4] நடனக் கூடம்

**37] ---------------- நூலில், 'ஓவத்தனைய இடனுடை வனப்பு' என வீட்டின் அழகை ஓவியத்திற்கு ஒப்ப வைத்துக் கவிஞர் போற்றுகிறார்.**

1] சிலப்பதிகாரம்

2] சீவகசிந்தாமணி

**3] புறநானூறு**

4] கலித்தொகை

**38] சுடுமண் சுவர்மீது வெண்சுதை பூசிச் செஞ்சாந்து கொண்டு ஓவியங்கள் தீட்டினர். - இங்கு 'வெண்சுதை' என்பது எதனைக் குறிக்கிறது?**

1] களிமண்

2] வண்டல் மண்

**3] சுண்ணாம்பு**

4] செங்கல்

**39] மரப்பலகை, துணிச்சீலை, திரைச்சீலைகளில் ஓவியம் எழுதினர். நாடகமேடைகளில் பல வண்ணங்களில் கவின்மிகு காட்சிகள் தீட்டப்பட்ட திரைச்சீலைகள் தொங்கினவற்றை --------------- கொண்டு அறிகிறோம்.**

1] நாடகக் காட்சிகள்

2] முன்னோர் கதைகள்

**3] ஓவிய எழினி**

4] பாறைகள்

**40] வண்ணங்கலவாமல் கரித்துண்டுகளால் வடிவம் மட்டும் வரைவதனை ----------------- என்றழைத்தனர்.**

1] கோட்டோவியம்

2] சுவரோவியம்

**3] புனையா ஓவியம்**

4] வண்ண ஓவியம்

**குறிப்பு - வண்ணங்கலவாமல் கரித்துண்டுகளால் வடிவம் மட்டும் வரைவதனைப் புனையா ஓவியம் என்றழைத்தனர். இன்றும், இது மென்கோட்டு ஓவியமாக நடைமுறையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.**

**41] கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாதது எது?**

**இயற்கைக் காட்சிகள், நினைவுகள், கற்பனைக் காட்சிகள், சமுதாய வாழ்க்கை முறைமை, இதிகாச புராணக்கதைகள் என்பன ஓவியத்திற்குரிய கருப்பொருள்களாயின.**

1] இயற்கைக் காட்சிகள்

**2] நினைவுகள்**

3] கற்பனைக் காட்சிகள்

4] சமுதாய வாழ்க்கை முறைமை

**42] ஓவியர்கள் சோதிடக்கலை, வானநூல், கதைகள் முதலியவற்றைக் கற்றுணர்ந்து செவ்வனே சித்திரம் தீட்டினர். ஆடு முதலான பன்னிரண்டு இராசிகளையும், விண்மீன்களையும் வரைந்த செய்தி ------------------ என்னும் சங்க நூல் தரும் அரிய செய்தியாகும்.**

1] பரிபாடல்

2] பதிற்றுப்பத்து

3] கலித்தொகை

**4] நெடுநல்வாடை**

**குறிப்பு :- ஓவியங்களில் நிற்றல், இருத்தல், கிடத்தல் ஆகிய மனித இயல்புகளையும் வீரம், அமைதி, சினம், வியப்பு, உவகை முதலிய மெய்ப்பாடுகளையும் உத்தமம், மத்திமம், அதமம் மற்றும் தசதாளம், நவதாளம், பஞ்சதாளம் முதலிய அளவுகளையும் வலியுறுத்துவது தமிழருக்கே உரிய ஓவிய மரபுகளாக விளங்குகின்றன.**

**43] சங்க காலத்தில் செழித்திருந்த ஓவியக்கலை இடைக்காலத்தில் சிதைந்து மறைந்து போகத் தொடங்கியது. மறைந்து கொண்டிருந்த ஓவியக்கலைக்கு மீண்டும் புத்துயிர் ஊட்டியவர்கள் ---------------- பேரரசர்களாவர்.**

1] சேரர்

2] சோழர்

3] பாண்டியர்

**4] பல்லவர்**

**44] ---------------- ஆம் நூற்றாண்டில் தமிழகத்தை ஆண்ட முதலாம் மகேந்திரவர்ம பல்லவன், கலையார்வம் மிக்கவன்.**

**1] கி.பி. 7**

2] கி.பி. 8

3] கி.பி. 9

4] கி.பி. 10

**45] கீழ்க்கண்ட கூற்று எந்த மன்னனைப் பற்றியது?**

**இவர் காலத்தில் ஓவியக்கலை எழுச்சியுற்று உயர்நிலையை எட்டியது. இம்மன்னனே சிறந்த ஓவியனாகப் புகழ்பெற்றிருந்தான். கல்வெட்டுகள் இம்மன்னனைச் சித்திரக்காரப்புலி எனப் புகழ்கின்றன. தட்சிணசித்திரம் என்னும் ஓவிய நூலுக்கு இம்மன்னன் உரை எழுதியுள்ளான்.**

**1] முதலாம் மகேந்திரவர்மன்**

2] இரண்டாம் மகேந்திரவர்மன்

3] முதலாம் நரசிம்மவர்மன்

4] இரண்டாம் நரசிம்மவர்மன்

**46] பனமலை, திருமலை, மாமல்லபுரக் குகைக்கோவில், மாமண்டூர், காஞ்சிக் கைலாசநாதர் கோவில் முதலிய இடங்களில் --------------------- கால ஓவியங்கள் சிதைந்த தோற்றத்துடன் காணப்படுகின்றன.**

1] சேரர்

2] சோழர்

3] பாண்டியர்

**4] பல்லவர்**

**குறிப்பு :- பார்வதி உருவம், கின்னரர், கின்னரி, கந்தர்வர் ஓவியங்கள் காண்போரை மயக்குவன.**

**47] திருநந்திக்கரையில் -------------- கால ஓவியங்கள் கிடைத்துள்ளன.**

**1] சேரர்**

2] சோழர்

3] பாண்டியர்

4] பல்லவர்

**48] புதுக்கோட்டைக்கு அருகே சித்தன்னவாசல் என்னும் குகைக்கோவில் ஓவியங்கள், ஓவியக் கருவூலங்களாக வைத்துப் போற்றத்தகுந்தன. ------------------------ அவனிப சேகர ஸ்ரீவல்லபன் என்ற பாண்டிய மன்னன் காலத்தில், மதுரை ஆசிரியர் இளம்கௌதமன் இவ்வோவியங்களை வரைந்தார் எனக் கல்வெட்டுச் செய்தி அறிவிக்கின்றது. அங்குள்ள தாமரைத்தடாகம், ஆடல் அணங்குகள், அரசன், அரசி ஓவியங்கள் நம் கண்ணைக் கவர்வன.**

1] கி.பி. ஆறாம் நூற்றாண்டில்

2] கி.பி. ஏழாம் நூற்றாண்டில்

3] கி.பி. எட்டாம் நூற்றாண்டில்

**4] கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில்**

**49] -------------- கால வனப்பு மிக்க ஓவியங்களைத் தஞ்சைப் பெரிய கோவிலில் கண்டு மகிழலாம். அவற்றிலுள்ள கவின்மிகு கயிலைக்காட்சி கண்களுக்கு விருந்தளிப்பன. சேரமான், சுந்தரர் கயிலைசெல்லும் காட்சி, சிவபெருமான் முப்புரம் எரித்த காட்சி, சுந்தரரைத் தடுத்தாளும் கோலம், நாட்டிய மகளிர், மாமன்னன் இராசராசன், கருவூர்த்தேவர் முதலிய ஓவியங்கள் வரலாற்றுச் சிறப்பை உணர்த்துவன.**

1] சேரர்

**2] சோழர்**

3] பாண்டியர்

4] பல்லவர்

**50] திருவரங்கம், திருப்பதி, தில்லை, திருவாரூர், குடந்தை, மதுரை, காஞ்சி முதலிய பல இடங்களில் ------------- மன்னர்களின் ஓவியங்கள் காணப்படுகின்றன.**

1] சோழர்

2] மராட்டியர்

**3] விசயநகர நாயக்கர்**

4] பல்லவர்

**51] ------------------- நூற்றாண்டின் தொடக்கத்தில் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்கள் காலத்தில் ஓவியக்கலை நன்கு வளர்ச்சி பெற்றது. ஓலைகளிலும், கண்ணாடிகளிலும், தந்தங்களிலும் ஓவியங்கள் தீட்டப்பெற்றன. வண்ணங்களின் வனப்புக்கேற்ப இரத்தினங்கள் பதிக்கப்பெற்றன.**

1] கி.பி. பதினான்கு

2] கி.பி. பதினாறு

**3] கி.பி. பதினெட்டு**

4] கி.பி. பத்தொன்பது

**52] கொடைக்குணம் - என்ற கதையின் ஆசிரியர் யார்?**

1] ராஜம் கிருஷ்ணன்

2] சி.சு.செல்லப்பா

3] பி.எம்.முத்து

**4] கழனியூரன்**

**53] தோயும் வெண்டயிர் மத்தொலி துள்ளவும்; ஆய வெள்வளை வாய்விட் டரற்றவும்; தேயும் நுண்ணிடை சென்று வணங்கவும்; ஆய மங்கையர் அங்கை வருந்துவார் - இந்த பாடலில் பயின்று வந்துள்ள அணி?**

1] ஏகதேச உருவக அணி

2] வேற்றுமை அணி

3] இல்பொருள் உவமை அணி

**4] இயல்பு நவிற்சியணி**

**குறிப்பு :- இயல்பு நவிற்சியணி:- ஒரு பொருளின் இயல்பை உள்ளது உள்ளவாறு கூறுவது இயல்பு நவிற்சியணி எனப்படும்.**

**54] உயரமான மலையை "விண்ணைத் தொடும் மலை என வருணித்தல், உயரமான வைக்கோல் போரை "வானை முட்டும் வைக்கோல்போர்" என உயர்த்திக் கூறுதல் - --------------- அணியாகும்.**

1] ஏகதேச உருவக அணி

2] வேற்றுமை அணி

3] இல்பொருள் உவமை அணி

**4] உயர்வு நவிற்சியணி**

**குறிப்பு :- உயர்வு நவிற்சியணி:- ஒருபொருளின் தன்மையை மிகைப்படுத்திக் கூறுவது உயர்வு நவிற்சியணி எனப்படும்.**

**55] பல பொருள்களைத் தொடர்ந்து சொல்லும்போது, ஒவ்வொன்றின் பின்னும் ------------ இடுதல் வேண்டும்.**

**1] காற்புள்ளி**

2] அரைப்புள்ளி

3] முக்காற்புள்ளி

4] முற்றுப்புள்ளி

**56] ஓர் எழுவாய், பல பயனிலைகளைக் (வினைமுற்றுகளை) கொண்டு முடியும்பொழுது, ஒவ்வொரு பயனிலைக்குப் பின்னரும் ------------- இடுதல் வேண்டும்.**

1] காற்புள்ளி

**2] அரைப்புள்ளி**

3] முக்காற்புள்ளி

4] முற்றுப்புள்ளி

**57] ஓர் எழுத்தையோ சொல்லையோ சொற்றொடரையோ தனியே குறிக்கும் இடத்திலும், ஒரு சொற்றொடரில் நூலின் பெயர், பழமொழி முதலியன வருமிடத்திலும் ------------------- இடுதல் வேண்டும்.**

**1] ஒற்றை மேற்கோள் குறி (' ')**

2] அரைப்புள்ளி

3] முக்காற்புள்ளி

4] முற்றுப்புள்ளி

**குறிப்பு :- வண்ணமிடும்போதும், தடித்த எழுத்துகளில் எழுதும்போதும், அடிக்கோடு இடும்போதும் இக்குறி இடத்தேவையில்லை.**

**58] ஒருவர் கூறியதனை நேர்கூற்றாகக் கூறும்போதும், ஒரு தொடரை மேற்கோளாகக் கூறும்போதும் ------------------- இடுதல் வேண்டும்.**

**1] இரட்டை மேற்கோள் குறி (" ")**

2] ஒற்றை மேற்கோள் குறி (' ')

3] முக்காற்புள்ளி (;)

4] முற்றுப்புள்ளி (.)

**59] 1901 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் பதினான்காம் நாள் ஞாயிற்றுக்கிழமையன்று (14.09.1901) பிற்பகலில் மதுரையிலுள்ள சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் ----------------- தமிழ்ச்சங்கத்தை தோற்றுவித்தார், பாண்டித்துரை.**

1] இரண்டாம்

2] மூன்றாம்

**3] நான்காம்**

4] ஐந்தாம்

**60] "தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை" - என்ற கூற்று யாருடையது?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] திரு.வி.க

4] மறைமலையடிகள்

**61] கல்லும் மலையும் குதித்து வந்தேன் - பெருங்; காடும் செடியும் கடந்து வந்தேன்; எல்லை விரிந்த சமவெளி - எங்கும் நான்; இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன் - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

3] திரு.வி.க

**4] கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

**62] காயும் நிலத்தழல் ஆற்றிவந்தேன்-அதில்; கண்குளிரப் பயிர் கண்டுவந்தேன்!; ஆயும் மலர்ப்பொழில் செய்துவந்தேன்-அங்கென்; ஆசை தீரவிளை யாடிவந்தேன் - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

3] திரு.வி.க

**4] கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

**63] ஏறாத மேடுகள் ஏறிவந்தேன்-பல; ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்; ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன்-மணல்; ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன் - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

3] திரு.வி.க

**4] கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

**64] முல்லைக்கொடியின் கொழுகொம்பு பெறாத திகைப்பைக் கண்ணால் கண்டபின், தன் செல்வநிலையும், வாழ்வும் மறந்து, அதற்கு உதவுதலே உணர்வாய்த் தான் ஊர்ந்து வந்த தேரை அங்கு அதற்கு உரியதாக நிறுத்தி வந்தான் பாரி என்னும் வள்ளல் - இந்த கூற்று யாருடையது?**

1] பாரதிதாசன், பாண்டியன் பரிசு

**2] மு.வரதராசனார் , தமிழ் நெஞ்சம்**

3] திரு.வி.க, மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்

4] இவற்றில் ஏதுமில்லை

**65] கீழ்க்கண்ட கூற்றுகளுள் தவறானது எது?**

**1] இரவலர்க்குக் குதிரைகளை வழங்கி நாட்டையும் நல்கியவன் ராஜேந்திர சோழன் என்னும் வள்ளல்**

2] நீலநிறப் பட்டாடையை ஆலமர் செல்வனுக்குக் கொடுத்து வேண்டிய பொருள்களையும் ஊர்களையும் வந்தவர்க்கு எல்லாம் வழங்கி, எல்லாம் இழந்தவன் ஆய் என்னும் வள்ளல்

3] பெறுதற்கு அரிதாய் வாழ்நாள் வளர்ச்சிக்கு உரியதாய் பெற்ற நெல்லிக்கனியையும் தான் உண்ணக் கருதாமல், புலவர் நெடிது வாழ விழைந்து கொடுத்து மகிழ்ந்தவன் அதியமான்

4] நண்பர்தம் இல்லறம் நடத்தற்கு வேண்டுவன நல்கிப் புகழ் பெற்றவன் நள்ளி. கூத்தர் தம் கலை வாழ அவர்க்கு நாடு கொடுத்துக் களித்தவன் ஓரி

**குறிப்பு :- இரவலர்க்குக் குதிரைகளை வழங்கி நாட்டையும் நல்கியவன் காரி என்னும் வள்ளல்**